இன்றும வங்கிகளுகது விடுமுறை; ரூபாய் மதிப்புமுடிவில்லை

Registered as a Newspaper in Ceylon * விலை சதம் 10

ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 9
இதழ் 353
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க கார்த்திகை 6 ஷஃபான் 19 புதன்கிழமை [22-11-67]

கொழும்பு, செவ்வாய் பிரிட்டன் தனது ஸ்டர்லிங் நாணயத்தின் மதிப்பைக் குறைத்துக்கொண்டதன் விளைவுகளை ஆராய்ந்து இலங்கையும் தனது நாணயத்தின் மதிப்பைக் குறைத்துக்கொள்வதா, குறைக்காதுவிடுவதா என்பது பற்றி அரசாங்கம் இன்னும் ஒரு முடிவும் செய்யவில்லை. புதன்கிழமை தான் இறுதி முடிவு செய்யப்படுமெனத் தெரிகிறது.

மந்திரிசபை நேற்றும் இன்று மாலையும் கூடி நிலைமையை ஆராய்ந்தது. புதன்கிழமையும் இலங்கையிலுள்ள வங்கிகள் அனைத்தும் மூடப்பட்டிருக்கும். இத்துடன் வங்கிகளுக்கு 4 நாட்கள் விடுமுறை கிடைத்துள்ளன.

போதனை மொழி பிரச்னைக்கு முடிவு; மக்கள்மகிழ்ச்சி; திருப்தி

கல்வி மசோதாவுக்கு பலரும் வரவேற்பு

யாழ்ப்பாணம், புதன் பெரும் சர்ச்சையையும் தமிழ்மக்களுக்குப் பெரும் கவலையையும் கொடுத்து வந்த போதனாமொழிப் பிரச்னைக்கு கல்வி அமைச்சர் கொண்டுவந்துள்ள புதிய கல்வி மசோதா தீர்வு கண்டிருப்பது குறித்து யாழ்ப்பாணத்தில் திருப்தியும் மகிழ்ச்சியும் ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஜனப் பிரதிநிதிகள் சபையில் கல்வி அமைச்சர் திரு ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்ல தமது புதிய கல்வி மசோதாவை சமர்ப்பித்திருந்தார். ஒரு பிள்ளையின் தாய்மொழியே அந்தப்பிள்ளையின் போதனா மொழியாக இருக்குமென்று மசோதாவில் கூறப்பட்டிருக்கிறது. தாய்மொழி சிங்களம் அல்லது தமிழாக இருக்கும் எனினும் இச்சட்டம் நிறைவேறும் திகதிக்கு முன் ஆங்கில மொழியில்போதனைகளுபெற்ற மாணவர்க்குப் போதனையை ஆங்கிலத்தில் அளிப்பதனை சட்ட ஏற்பாடுகள் பாதிப்பனவாகக் கருதமுடியாது என்றும் மசோதா கூறுகிறது.

போதனா மொழியைத் தெரிவுசெய்யும் உரிமை பெற்றோருக்கு இருக்குமென்று கல்வி அமைச்சர் முன்னர் தமது கல்வி வெள்ளை அறிக்கையில் தெரிவித்திருந்தார். இது தமிழ் சமூகத்தையே பெரிதும் பாதிக்குமென்றும் இந்த யோசனையைக் கைவிட்டு தாய்மொழியே போதனா மொழியாக இருக்க வகை செய்யப்படவேண்டுமென்றும் பொது ஸ்தாபனங்களும் ஆசிரியசங்கங்களும் தமிழ் அரசு, தமிழ்க் காங்கிரஸ் கட்சிகளும் "ஈழநாடு" பத்திரிகையும் வற்புறுத்தி வந்தன.

இக் கோரிக்கைக்குச் செவிசாய்த்து பெற்றோர் விரும்பிய மொழியில் பிள்ளைகளுக்குக் கல்வி போதனையளிக்கும் யோசனையைக் கல்வி அமைச்சர் கைவிட்டிருப்பதுகண்டு பலபொது ஸ்தாபனங்களும் தமிழ் மக்களும் மகிழ்ச்சிதெரிவிக்

(8-ம் பக்கம் பார்க்க)

'நான்வகுப்புவாதியா?'

கல்வி அமைச்சர் கேட்கிறார்

கொம்பனித்தெரு, செவ்வாய்

என்னைச்சிலர் வகுப்புவாதியென்றும் கூறுகின்றார்கள். இது முற்றிலும் தவறுனதாகும். நான் யாரிடத்திலும் பாரபட்சம் காட்டி நடந்தது கிடையாது. அப்படி இனி நடக்கப்போவதுமில்லை என கல்வி அமைச்சர் திரு ஐ. எம். ஆர். ஏ இரியகொல்ல தெரிவித்துள்ளார்.

பம்பலப்பிட் டியிலுள்ள இந்துகனிஷ்ட பாடசாலையின் புதிய கட்டடத்தைத் திறந்து வைத்துப் பேசுகையிலேயே திரு. இரியகொல்ல மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

எமது நாட்டில் பாடசாலைகளில் இடநெருக்கடி நிலவுவது ஒரு பெரும் பிரச்சனையாக இருந்துவருகின்றது.

கொழும்பு மாவட்டத்தில் புதிதாகச் சேருவதற்கு மூவாயிரம் பேரும் மற்றும் இலங்கையின் பிறபாகங்களில் இரண்டரை லட்சம் பேரும் விண்ணபபித்துள்ளனர். கல்வி அமைச்சர் என்ற முறையில் நான் எல்லாமாணவர்கள் விஷயத்திலும் பாரபட்சமின்றி நடந்துகொள்வேனென உறுதி கூறுகின்றேன்.

யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கொழும்பு தெற்கு எம். பி திரு. பெர்னட் சொய்சா ஆகியோரும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்.

"அமிழ்தினும்இனியது தமிழ் மொழி"

மலலசேகரா கூறுகிறார்

கெம்பனித்தெரு.செவ்வாய்

'அமிழ்தினும் இனியது தமிழ்மொழி. இந்தமொழியைக் கற்க எனக்குச் சந்தர்ப்பம் இதுவரை கிடைக்காமல் போய்விட்டது. இப்பொழுதுதான் நான் தமிழ் கற்று வருகிறேன். விரைவில் 'நான் தமிழ்மொழியைப் பேசுவதற்குக் கற்றுக் கொள்வேன்.

இவ்வாறு தேசிய உயர் கல்விச்சபையின் தலைவர் டாக்டர் ஜி. பி மலலசேகரா வெள்ளவத்தை சைவ மங்கையர் கழகத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கவந்துகொண்டு பேசுகையில் கூறினர்.

திரு மலலசேகரா மேலும் பேசுகையில் கூறியதாவது:-

சைவ மங்கையர் கழகத்தில் கல்விகற்ற பெண்மணிகள் நாட்டின் பல பாகங்களிலும் நற்பணியாற்றி வருகிறார்கள், இவ்விதம் இக் கல்லூரியில் பயிலும் மாணவிகள் கல்லூரிக்கும் நாட்டிற்கும் பெருமைதேடித் தரும் வகையில் நடந்துகொள்ளவேண்டும்.

அநுராதபுரத்தில் முஸ்லிம் மகாவித்தியாலயம்

அனுராதபுரம் செவ்வாய்

அனுரதபுரத்தில் கட்டப்பட்டு வந்த முஸ்லிம் பாடசாலையின் சகலவேலைகளும் பூர்த்தியாகிவிட்டது. இப் பாடசாலைவடமத்திய மாகாணத்திலேயே ஓர் சிறந்த முஸ்லிம் மகா வித்தியாலமாக அடுத்த ஆண்டு முதல் விழங்குமென கல்வி அதிகாரிகள் கூறுகின்றனர்.

இதுவரை காலமும் முஸ்லிம்களுக்கென அனுரதபுரியில் ஒரு தனிப்பாடசாலை இல்லாத குறையை இப்பாடசாலை தீர்த்துவைக்கும் முஸ்லிம் பெற்றோரும் முஸ்லிம் இளைஞர்கழகமும் இவ் விஷயத்தில் பெரிதும் ஊக்கம் காட்டி வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கடலில் யாத்திரை சென்ற 21 பேர் கைதானர்கள்

கடத்தல்காரர் என்கிறது இராணுவம்; சுங்கப்பகுதியினர் விசாரணை

யாழ்ப்பாண, செவ். நேற்றுமுன்தினம் வல்வெட்டித்துறை ஆதிகோவில் கடலில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட 21 பேரும் யாழ்ப்பாணம்சுங்க அதிகாரிகளால் நேற்று தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

வல்வெட்டித்துறை இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் சந்தேகத்தின் பேரில் இவர்களை கடலில்வைத்து கைதுசெய்து இவர்கள் சென்றதாக கூறப்படும் இயந்திர வள்ளத்தையும் சுங்கப்பகுதியினரிடம் ஒப்படைத்தனர்.

இவர்கள் கள்ளக்கடத்தலில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்பட்டே கைதுசெய்யப்பட்டதாக இராணுவத் தரப்பில் கூறப்பட்டுளளது. ஆனால் இந்த 21பேரும்நயினாதீவு நாகபூஷணி அம்மன கோவிலுக்குநேர்த்திக்கடன் செலுத்துவதற்காகச் சென்றுகொண்டிருந்ததாக அவர்கள் தெரிவித்துள்ளதாக அறியப்படுகிறது.

இவர்கள் இராணுவத்தினரால் கடலில்வைத்து தடுத்து நிறுத்தப்பட்டதாகவும் துன்புறுத்தப்பட்டதாகவும் இவர்களால் கொண்டு செல்லப்பட்ட பொருள்கள் பல கடலில் வீசப்பட்டதாகவும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் தெரியவருகிறது.

இந்த 21 பேரும் கரையோரத்துக்குக்கொண்டு வரப்பட்டு பலமணி நேரமாக தாகத்துக்கு தண்ணீர் கூடக் கிடைக்காத நிலையில் அவதிப்பட்டதாகவும் மணலில் வெயிலில் நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

ஜி. ஸி. ஈ. தமிழ்மொழி 'அ' பாடத்திட்டத்துக்கான மாதிரி வினா-விடைகள் வருகிற 25-ம் திகதி வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பனைக்கு

கார்

இளைப்பாறிய டாக்டர் ஒருவரின் சொந்தப் பாவிப் பிலுள்ள ஈ. எல். தொடர் இலக்க 'ரோவர் 75' மோட் டார் கார், சிறந்த நிலையி லுள்ளது. 50,000 மைல் வேலைசெய்துள்ளது. டயர் கள், பட்டரி புதியவை. 20,000 ரூபாய்க்கு மேல் கேட்கலாம். நவம்பர் 24ம் திகதி, சுண்டிக்குளி, சோம சுந்தரம் அவனியூ 4-ம் இல க்க இல்லத்தில் பார்வை யிடலாம். 2571

காணிகள்

திருநெல்வேலி சந்திக்கரு காமையில், அரசினர் விறகு காலிக்கு அருகில் நாலரைப் பரப்பு காணி, வீடு கிணறு உட்படவும், இந்துவாலிபர் சங்கத்துக் கருகாமையில் தோட்டக்காணி பத்துப் பர ப்பும் விற்பனைக்குண்டு விப ரங்கட்கு திருமதி. தி. விசுவ லிங்கம், வைத்தியர் வளவு, அளவெட்டி வடக்கு. 2139

வாடகைக்கு

வீடு

இருபாலைரோட்டில்பலாலி ரோட் கோண்டாவில் சந்தி க்கு அண்மையில் சகலவசதி களுடன் வீடு வாடகைக்கு உண்டு. விபரங்களுக்கு: ஏ. எஸ். இரத்தினம், பலாலி ரோட், கோண்டாவில். 2117

தேவை

எமது தொழிற்சாலையில் வேலைசெய்வதற்கு படித்த பெண்களும், சைக்கிள் டிலி வரிக்கு ஆண்களும் தேவை. நற்சான்றுப்பத்திரங்களு டன் நேரில் வரவும். ஷண்ஸ், பஸ் ஸ்ராண்ட் எதிரில், யாழ்ப்பாணம். 2141

வாலிவாரியார் பிரசங்கம்

சுழிபுரம், செவ்வாய்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தேசிய சேவைத் தமிழ்ப் பகுதியினருக்கு வழக்கம்போல இந்து இளைஞர் கொழும்பு சுப்பிர மணியசுவாமி ஆலயத்தில் நடைபெறும். திருமுருகிரு பானந்தவாரியாரின் பிரசங் கத்தை, நேரடியாகவோ, அன்றி ஒலிப்பதிவுசெய்தோ ஒலிபரப்ப நடவடிக்கை எடு க்கும்படி ஒரு மகஜரை கட ந்தவாரம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தனர். அம்மகஜர் சம்பந்தமாக ஒலிப்பதிவு மா அதிகாரிக்காக, தமிழ் நிகழ்ச்சி அதிகாரி திரு. சி. நடராசா பின்வரும் பதிலை கழக செயலாளர் திரு. க. வாமதேவனுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

கொழும்பு சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் திரு முருக திருபானந்தவாரி யார் நிகழ்த்தும் கதாப்பிர சங்கத்தின் ஒரு பகுதியை ஒலிப்பதிவு செய்தும் நிலை யத்திம் அவரின் சில சொற் பொழிவுகளை ஒலிப்பதிவு செய்தும் ஒலிபரப்பு புவதற்கு ஒழுங்குகள் செய்துள்ளோம். கூடிய விரைவில் இவை ஒலிபரப்பப்படும்.

நியூ காலிங்கன்

[இணுவில்]

தினசரி 6-30, 9-30 மணி விடுமுறைதினங்களில் 2-30

எம். ஜி. ஆர் -சரோஜாதேவி நடித்த

அன்பே வா

ரயில் சேவை தாமதம்

காங்கேசன்துறை செவ். பலாலியிலிருந்து காங்கேசன் துறைக்கு வரும் மாலை நேர ரயில் மிகவும் தாமதிப்ப தால் யாழ்ப்பாணத்திலி ருந்து மாலைநேரத்தில் வேலை யிலிருந்து திரும்புபவர்க ளும் மாணவர்களும் வீடு செல்வதில் மிகவும் தாமத மேற்படுவதாகத் தெரிகி றது.

குறிப்பிட்ட நேரத்திலி ருந்து சுமார் மூன்று மணி நேரம் தாமதித்தே இவர் கள் வீடு போய்ச் சேர வேண்டிய நிலையிலிருப்பதா கவும் தெரியவருகிறது.

எப்படி விநியோகிப்பது?

சுழிபுரம், செவ்.

வலிகாமம் மேற்கு பல நோக்கக்கூட்டுறவுச் சங் கங்களின் சமாஜத்தினர் தமதுசங்கங்களுக்கு பால்மா உணவுப் பொருள்களை இவ்வாரம் எவ்விதம் விநி யோகிப்பதென்பதே தெரியாது தடுமாற்றமடைந்துள்ள தாகத்தெரியவருகிறது.

மிகக்குறைந்தளவுபால்மா உணவு டின்களை வைத்துக் கொண்டு பெருந்தொகை யான மக்களுக்கு எவ்விதம் விநியோகிப்பதென்பதே இவர்களை எதிர்நோக்கி யுள்ள பிரச்னை.

ஆசிரியை நியமனம்

சுழிபுரம், செவ்வாய்

தொல்புரத்தைச் சேர்ந்த செல்வி தனகாம்பிகை பொன்னையா, இம்மாதம் 18-ம் திகதி தொடக்கம் சுழிபுரம் விக்ரோறியாக் கல் லூரியில் மனையியல் ஆசிரி யையாக நியமனம் செய்யப் பட்டுள்ளார்.

கடந்த பலகாலமாக மேற் படி கல்லூரியில் ஓர் மனை யியல் ஆசிரியை இல்லாதது பற்றி செய்துகொள்ளப் பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்தே இவர் நியமிக் கப்பட்டுள்ளார்.

"நாட்டைப்பற்றி சிந்திக்கவேண்டும்"

உடுப்பிட்டி, செவ்வாய்

"தனிமனிதரோ, ஒரு சமூகமோ நியாயத்தையும் மனித நீதியையும் பெறுவ தற்கு ஐக்கியநாடுகள் மனித உரிமைசாசனம் வழிவகுத் துள்ளது. சிறுபான்மையின ரின் பிரச்னைகள்தீர ஐ. நா. வின் கொள்கைப்படி நடக்க வேண்டும். அரசியல் கட்சி கள் தங்கள்கட்சியின் வளர்ச் சியையும், வெற்றியையும் பற்றிச் சிந்திப்பதைவிடுத்து நாட்டின் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திப்பதே மேலா னது."

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம் பரம், உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் தினக் கூட் டத்தில் பேசுகையில் கூறி னார். இக்கூட்டத்திற்கு வட மராட்சி காரியாதிகாரி திரு. எஸ் ஜெயகாந்தன் தலைமை வகித்தார். வேறும் பலரும் பேசினர்.

REGAL JAFFNA

Daily at

4-45, 7-00 & 9-45 p. m.

Only

Dirk Bogarde

in

Doctor in Distress

In Colour

மனோகரா

யாழ்ப்பாணம்

Daily at

6-30 & 9-45 p.m.

Joy Mokerjee

ShairaBanu - JohnnyWalker

in

DOORIYAAN

[Hindi]

கியூபாவுக்கு விமானம் கடத்தப்பட்டது

புளொரிடா. நவ. 21

புளொரிடா மீது சென்று கொண்டிருந்த விமான மொன்றை ஆயுதந் தரித்த மனிதன் ஒருவன், விமானி யைப் பயமுறுத்தியதன் மூலம் கியூபாவுக் செலுத் தச்செய்திருக்கிறான்.

கூட்டுறவு துறைமுக சங்க மகாநாடு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு துறைமுகசேவை கள் சங்கத்தின் மகாநாடு இம்மாதம் 25, 26-ம் திகதி களில் நடைபெறவிருக்கி றது.

யாழ்ப்பாணம் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற விருக்கும்இம்மகாநாட்டுக்கு கூட்டுறவு ஆணையாளர் திரு. பி. ஏ. சிவா தலைமை தாங்குவார்.

பாகிஸ்தானில் நாணயமதிப்பு குறைப்பு இல்லை

கராச்சி, நவ. 21

பாகிஸ்தான், தனது ரூபாயை நாணய மதிப்பு குறைப்பதில்லையென முடிவு செய்துள்ளது.

11 நாடுகள்

இதற்கிடையில், பிரிட்ட னின் ஸ்டேர்லிங், பவுண், நாணய மதிப்புக் குறைப் பைத்தொடர்ந்து இதுவரை 11 நாடுகள் தமது நாணயங் களை மதிப்புக்குறைப்புச் செய்துள்ளன.

அமெரிக்காவில்

உலகிலுள்ள முக்கியமான நாடுகள், பிரிட்டனின் உதா ரணத்தைப் பின்பற்றவில்லை யென்பதையிட்டு அமெ ரிக்கா மகிழ்ச்சி தெரிவித் துள்ளது.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

இப்பொழுது நடைபெறுகிறது

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

தினசரி பி.ப. 2-30, மாலை -20, இரவு 9-30 மணிக்கு

பிளாஸா [வெள்ளவத்தை]

கெப்பிட்டல் [கொழும்பு]

மைலன் [கொட்டாஞ்சேனை]

விஜயா [மட்டுநகர்]

ஸ்ரீகிருஷ்ணா [திருமலை]

மற்றும் நாலு திரைகளில்

எம். ஜி. ஆரும், ஜெமினி கணேசனும்

முதல்முறையாக சேர்ந்து நடித்து வெற்றிகண்ட இன்பச் சித்திரம்!

கடமைக்கும் பாசத்திற்கும் நடுவே சிக்கித்தவிக்கும் ஒரு போலிஸ் அதிகாரியின் உணர்ச்சியூட்டும் சித்திரம்! 100 நாட்களுக்கு மேல் ஒடி தென்னகத்தில் பல்லர விரக் கணக்கான மக்களின் பாராட்டைப் பெற்ற சித்திரம்.

மற்றுமட

ஜெயலலிதா, ஜெய்ந்தி

நம்பியார், அசோகன்,

நாகேஷ், ஸ்ரீராம்,

மனோரமா,

பி. கே. சரஸ்வதி

நடித்த

தேவர் பிலிம்ஸ்

முகராசி

டைரக்ஷன் எம். ஏ. திருமுகம்

இசை: திரை இசைத்திலகம் கே. வி. மகாதேவன்

6-வது வாரம்

கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை]

லக்ஷ்மி [கரவெட்டி]

ஜெய்சங்கர் — ஜமுனா — நாகேஷ் — பேபி பத்மினி நடித்த

ஏ. வீ. எம்மின் ஜனதிபதி பரிசுபெற்ற

குழந்தையும் தெய்வமும்

சர்வ பூச்சி நாசினி

'போலிடோல்'

விளைச்சலைப் பெருக்கும்

மற்றும் நாசினி

மெற்றசிஸ் டொக்ஸ்
மிளகாய் குருமன் நோய் அழிக்கும்.

பொலித்தியோன்
மரக்கறி பூச்சிகளை அழிக்கும்.

மட்டாசில்
எல்லாப் புழுக்களை அழிக்கும்

லெபேசிட்
புடோல் பாகை வகையைப் பாதிக்கும் பழ அழிக்கும்

அன்றக்கோல்
உருளைக்கிழங்கு வாடல் கட்டுப படுத்தும்

குப்ருவிற
செம்பு பங்கசு கொல்லி

ஹேலீஸ் லிமிட்டட்

தபால் பெட்டி 70, 400, டீன்ஸ் ரோட், கொழும்பு-10

தொலை பேசி 96333

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவில் மேற்கு ஜேர்மன் அதிபர் டாக்டர் கெயிசிங்கருக்கு மாபெரும் வரவேற்பு

இரு நாடுகளினதும் ஒத்துழைப்பு பற்றி பிரதமர் இந்திரா காந்தி வலியுறுத்தல்

புதுடில்லி, நவ. 21

மேற்கு ஜேர்மன் அதிபர் டாக்டர் கேற் கெயிலிங்கர், நேற்றுக் காலை இந்தியா வந்து சேர்ந்தார். அவருக்குப் பாலம் விமானநிலையத்தில் உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

நேற்றிரவு, பிரதமர் இந்திராகாந்தி அளித்த இரவு விருந்தில் டாக்டர் கெயிலிங்கர் கலந்துகொண்டார். அவ் விருந்தின்போது, இரு தலைவர்களும், இரு நாடுகளுக்குமிடையே அதிக ஒத்துழைப்பும், நல்லுறவும் வளர்ந்துவருவதாகக் குறிப்பிட்டனர்.

இந்தியாவின், கலாச்சாரம், பண்பாடு இவற்றை அறிந்துகொள்வதில் மேற்கு ஜேர்மனி அதிக பங்காற்றியுள்ளதாகப் பிரதமர் இந்திராகாந்தி கூறினர்.

உலகில் இன்றுள்ள முக்கியமான பிரச்னை பணக்காரருக்கும் ஏழைகளுக்கு மிடையேயான வேற்றுமையை நீக்குவதெனவும் இப் பிரச்னையைத் தீர்ப்பதில் மேற்கு ஜேர்மனியும் பணிசெய்யும் எனத் தாம் நம்புவதாகவும் திருமதி இந்திரா மேலும் கூறினர்.

தற்போதைய சர்வதேச நிலைமை பற்றித் தமது கவலையை வெளியிட்டபிரதமர் இந்திரா, தமது நாட்டின் கொள்கை சமாதான சக

[6-ம்பக்கம் பார்க்க]

வேலூரில்
எம். ஜி. ஆருக்கு
வரவேற்பு

வேலூர், நவ. 21

துப்பாக்கியால் சுடப்பட்ட சம்பவத்துக்குப் பிறகு முதன்முறையாக வேலூருக்கு விஜயஞ்செய்த தி. எம். ஜி. ராமச்சந்திரனுக்கு மாபெரும் வரவேற்பளிக்கப்பட்டது. அவர் வந்த வழியில் ரஸ்தாவின் இரு மருங்கிலும் ஏராளமான பேர் கூடியிருந்து வரவேற்றனர்.

நகரசபை அளித்த வரவேற்புக்கு திரு. எம். ஜி. ராமச்சந்திரன் பதிலளிக்கையில் உள்ளூராட்சி நிர்வாகத்தில் அரசியல் சம்பந்தப்படாமல் இருந்தால் தான் ஜனநாயகம் திறமையாகவும் வெற்றிகரமாகவும் செயற்படமுடியும் என்று கூறினர்.

மொண்ட்கொமரி பிரபுவின் விலைமதிப்பற்ற பரிசுப் பொருட்கள்

கிராமப்புற வீட்டிலிருந்து களவாடப்பட்டன

லண்டன், நவ. 21

பிரிட்டனின் யுத்தகால வீரரான மொண்ட் கொமரி பிரபு லண்டனில் தமது 80வது பிறந்த தின விழாவைக் கொண்டாடிக்கொண்டிருக்கையில் அவரது கிராமப்புற வீட்டிலிருந்து, 'பீல்ட் மார்ஷல்' பட்டத்துக்குரிய இராணுவச் சின்னமான குறுந்தடி களவு போய்விட்டது.

லண்டனுக்கு 40 மைல் தொலைவில் உள்ள ஆல்டன் என்ற இடத்தின் அருகில் அவரது வீடு உள்ளது. குறுந்தடி மட்டுமின்றி, விலைமதிப்பற்ற அரிய பல பரிசுப் பொருள்களையும் இந்தக் களவில் அவர் பறிகொடுத்திருக்கிறார். அவரது சேவையைப் பாராட்டிப் பல அரசாங்கங்கள் அளித்தவை அவை.

இரண்டாவது உலகப் போரில் ஆபிரிக்காவில் ஜேர்மன் இராணுவத்தின்மீது வெற்றி கண்ட 8வது சேனையைத் தலைமைதாங்கி நடத்தியவர் மொண்ட் கொமரி பிரபு என்பது வாசகர்கள் அறிந்திருக்கலாம்.

திருடிச்சென்ற தமது விலைமதிப்பற்ற பொருள்களைத் திருப்பித் தந்துவிடுமாறு திருடர்களுக்கு அவர் ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேற்கு ஆசியா மீது ரஷ்ய தீர்மானம்

பந்தோபஸ்து சபையில் சமர்ப்பிக்கப்பட்டது

நியூயோர்க், நவ. 21

மேற்கு ஆசியப் பிரச்னை மீது ரஷ்யா ஒரு தீர்மானத்தை ஐ. நா பந்தோபஸ்து சபையில் சமர்ப்பித்துள்ளது.

அத்தீர்மானத்தில் அரபுப் பிராந்தியங்களிலிருந்து இஸ்ரேல் துருப்புகள் வாபஸ் பெற வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

சபையில் பேசிய ஜோர்தான் பிரதிநிதி, இஸ்ரேல் துருப்புகள் அண்மையில் அகதிகள் முகாமொன்றைத் தாக்கியதில் 14 பேர் கொல்லப்பட்டதாகவும், 30 பேர் காயமுற்றதாகவும் குற்றஞ் சாட்டினர்.

இக்குற்றச்சாட்டை 'பாரதூரமானது' என்று சோவியத் பிரதிநிதி வர்ணித்தார்.

பிரிட்டன் - ஐ. அ. கு. மீண்டும் ராஜீய உறவு

லண்டன், நவ. 21

பிரிட்டனுக்கும் ஐக்கிய அரபுக் குடியரசுக்குமிடையே அடுத்த மாத பிற்பகுதியில் மீண்டும் ராஜதந்திர உறவு ஏற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ரொடீஷியாவில் பிரிட்டிஷ் கொள்கையை எதிர்த்து 1965 டிசம்பரில் ஐ. அ. கு பிரிட்டனுடன் உறவை முறித்துக்கொண்டது. இருதரப்பிலும் எவ்வித நிபந்தனையும் விதிக்கப்படவில்லை, என்று பிரிட்டிஷ் அறிவிப்பு கூறுகிறது.

கெய்ரோவில் பிரிட்டிஷ் தூதரகம் இருப்பதன் மூலம் மேற்கு ஆசியப் பகுதியில் அமைதி பராமரிப்புக்குத் தனது பணி இன்னும் நன்முறையில் பயன்படுத்தப்படும் என்று பிரிட்டன் கருதுகிறது.

சீனப் பிரதிநிதித்துவம் பற்றி ஐ. நா. சபையில் விவாதம்

போர்மோஸா எதிர்ப்பு

நியூயோர்க், நவ. 21

சீனாவுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கக் கோரும் தீர்மானம் பற்றிய விவாதம், ஐ. நா, பொதுச்சபையில் ஆரம்பமாகியுள்ளது.

இத்தீர்மானம் பற்றிப் பேசுகையில், சீனா, ஐ. நா. வை அழிக்க முயற்சிப்பதாகப் போர்மோஸாப் பிரதிநிதி குற்றஞ்சாட்டினர்.

இதற்கிடையில் சீனப் பிரதிநிதித்துவம் கோரும் விஷயத்தை சபையின் நிகழ்ச்சி நிரலில் முக்கிய விஷயமாகப் பிரகடனப்படுத்தும்படி பல அங்கத்துவ நாடுகள் கோரியுள்ளன.

முக்கிய விஷயம் என்றால், தீர்மானம் நிறைவேற சபையில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிடைக்க வேண்டுமென அர்த்தமாகும்.

தர்மபுர மாவட்ட சிரணி

அடுத்த மாதம் ஆரம்பம்

சென்னை, நவ. 21

தர்மபுர மாவட்ட சிரணியை அடுத்த மாத முற்பகுதியில் தமிழக முதன் மந்திரி திரு. சி. என். அண்ணாதுரை ஆரம்பித்துவைப்பார். இந்தச் சிரணியில் சுமார் 2000 பேர் வரை பங்குகொள்வரென எதிர்பார்க்கப்படுகிறது.

பிரிட்டிஷ் பிரதமரின் கார் களவாடப்பட்டது

லண்டன், நவ. 21

நேற்று முன்தினம், பிரிட்டிஷ் அரசாங்கம் தனது ஸ்டேர்லிங் பவுண் நாணய மதிப்புக்குறைவு செய்துவிட்டதனால் ஏற்பட்ட பரபரப்பில், பிரதமர் வில்சனின் கார் களவுபோனதை யாரும் கவனிக்கவில்லை.

அவரது உத்தியோக பூர்வ வாசஸ்தலமான இல. 10, டவுணிங் ஸ்ரீட்டில் மக்கள் குழுமி நின்று கோஷமிட்டுக் கொண்டிருக்கையில், யாரோ பிரதமரின் கறுப்பு நிறக் காரைக் களவாடிச்சென்றுவிட்டதாக, அக்காரைப் பின்னர் மீட்ட பொலிஸார் அறிவித்தனர். "கார் ஓட்டிச் செல்லப்படுகையில் ஒருவருமே கவனிக்கவில்லை" என அவர்கள் தெரிவித்தனர்.

ஹீத்ரோ விமானநிலையத்தில் பிரதமரின் கார் எவ்வித சேதமுமின்றிக் கிடக்கக் காணப்பட்டது.

இதுபற்றித் தாம் தீவிர புலன்விசாரணை செய்துவருவதாகப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

சென்னை

சர்வதேச தமிழாராய்ச்சி மாநாட்டில் கலைக்கண்காட்சி

சென்னை, நவ 21

சென்னையில் அடுத்த வருடம் ஜனவரி மாதம் நடைபெறவிருக்கும் சர்வதேச தமிழாராய்ச்சி மாநாட்டின் கலைக்கண் காட்சிக்குமுத் தலைவர் திரு. சா. கணேசன் அறிக்கையில் கூறியதாவது

இரண்டாம் உலகதமிழ்க் கருத்தரங்கு மாநாடு ஜனவரியில் நடைபெறுவதையொட்டிக் கலைக்காட்சியொன்றும் மாநாட்டின் சார்பில் அமைக்கப்பெறும் அந் காட்சியில் தமிழர் மொழி, இலக்கியம். வராறு, பண்பாடு போன்றவற்றை விளக்கும் அரிய நூல்களும் இடம்பெறும்.

அக்காட்சியில் தங்கள் தங்கள் நூல்களும் இடம் பெற வேண்டுமென்று விரும்பும் பதிப்பகத்தினரும் எழுத்தாளர்களும் கீழுள்ள முகவரிக்கு எழுத வேண்டும் கிரும் மேலும் தமிழில் வெளிவந்து நின்றுவிட்ட பத்திரிகைகளும் இக்காட்சியில் வைக்கப்பெறும்.

கிடைத்தற்கரிய பழந் தமிழ் நூல்கள், ஓலைச்சுவடிகள் ஆகியனவும் காட்சிகளில் இடம்பெறும். அவற்றை வைத்திருக்கும் அன்பர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு உடன் தகவல் தரும்படி கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். செயலாளர், கலைக்காட்சிக் குழு' 60-10 எட்வேட் எல்லியட்ஸ் வீதி மைலாப்பூர், சென்னை-4.

ஹரியாணாவில் ராஷ்டிரபதி ஆட்சி பிரகடனம்

சண்டிகார், நவ. 21

ஹரியாணாவில், ராஷ்டிரபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டது. ராஜ்யகவர்னர் அறிவித்துள்ளார்.

ஆளுங் கட்சியிலிருந்து பல அங்கத்தவர்கள் பிரிந்து சென்றிருப்பதால், ராஜ்யத்தில் அரசியல் ஸ்திரமின்மையும், நிர்வாகப் பாதிப்பும் ஏற்பட்டிருப்பதால், இந்த முடிவைத் தாம் செய்ய வேண்டியிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

கவர்னரின் இந்த முடிவை ராஜ்ய முதல் மந்திரி கண்டனம் செய்துள்ளார்.

மே. வங்காள அரசியல்

முதல் மந்திரியின் கடிதத்துக்கு ராஷ்டிரபதி பதில்

கல்கத்தா, நவ. 21

மேற்கு வங்காள சட்ட சபையைக் கலைப்பதற்கு சுப்ரீம் கோர்ட்டின் உத்தரவைப் பெறுமாறு மேற்கு வங்காள முதல் மந்திரி, இந்திய ராஷ்டிரபதிக்கு எழுதியிருந்த கடிதத்துக்கு ராஷ்டிரபதியின் பதில் வந்து சேர்ந்துள்ளது.

சட்ட சபையைக் கலைப்பதற்கு சுப்ரீம் கோர்ட்டினை அவசியமில்லை என அப்பதிலில் ராஷ்டிரபதி தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது.

ஆர்ப்பாட்டம்

நேற்று, மேற்கு வங்காள ஆளுங்கட்சியான ஐக்கிய முன்னணியை ஆதரித்துக் கல்கத்தாவில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

முதல் மந்திரி கருத்து

பின்னர், ஹவுராவில்நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் பேசிய முதல் மந்திரி திரு. அஜோய் முக்கர்ஜி, ஐக்கிய முன்னணியை அதிகாரத்துக்குக் கொண்டுவந்தவர்கள் மக்களே என்றும், அது ஆட்சியில் தொடர்ந்து இருப்பதா, இல்லையா என்பதை இறுதியாகத் தீர்க்க வேண்டியவர்கள் அவர்களே என்றும் கூறினர்.

சட்ட சபையில் தமது கட்சிக்குப் போதிய பெரும்பான்மை கிடைக்குமெனத் தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

நீ வயலில் எந்த விதையை விதைக்கின்றனையோ அந்த விளைவு தான் விளைந்து உன் வீட்டிற்குவரும். கம்பை விதைத்துவிட்டு கோதுமையை எதிர்பார்க்கக் கூடாது. அதுபோல் நீ நன்மையைச் செய்தால் உனக்கு நன்மையே வரும்- தீமையைச்செய்தால் தீமையையே அனுபவிப்பாய்.

— கிருபானந்தவாரியார்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கவரு கார்த்திகைமீ 6உ(22-11-67)

கல்வி மதோதாவும் போதனு மொழியும்

புதிய கல்வி மசோதாவை, கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்ல ஜனப்பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பித்துவிட்டார். தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தநாள் தொடக்கம் புதிய கல்வி மசோதா கொண்டுவரப்போவதாகத்தெரிவித்த கல்வி அமைச்சர், வெளிநாடுகள் பலவற்றுக்கும் சென்று திரும்பியபின் கல்வி வெள்ளை அறிக்கையொன்றைச் சமர்ப்பித்ததுடன் தமது கல்வித் திட்டங்கள் பற்றிப் பல இடங்களிலும் பலவும் பேசி வீணான சர்ச்சைகளை வளர்த்து இப்போது ஒருபடியாகக் கல்வி மசோதாவைக் கொண்டுவந்து விட்டார். இந்த மசோதா பற்றி முழுதாக இப்போது நாம் ஆராய விரும்பவில்லை.

தாய் மொழியே போதனு மொழியாக இருக்கும் என்று மசோதா கூறுகிறது. "தாய் மொழியே போதனு மொழியாக இருக்கும். ஆனால் பெற்றோர் விரும்பிய மொழியில் தங்கள் பிள்ளைகளுக்குக் கல்விப் போதனையளிக்கலாம்" என்று கல்வி அமைச்சர் முன்னர் சமர்ப்பித்த வெள்ளை அறிக்கையில் தெரிவித்திருந்தார். இது பற்றி பெரும் சர்ச்சை எழுந்தது. தமிழ்ப் பெற்றோர் இதை வன்மையாக எதிர்த்தனர். பெற்றோர் விரும்பிய மொழியை போதனுமொழியாக்கினால் தமிழ் சமூகத்துக்கு பெரும் தீங்கு ஏற்படுமென்பதை நாம் இப்பத்தியில் பல தடவைகளிலும் எடுத்துக்காட்டி எச்சரித்திருந்தோம். தமிழரசுக்கட்சியும் தமிழ்க் காங்கிரஸ்கட்சியும் தாய் மொழியே போதனு மொழியாக இருக்கவேண்டுமென்றுகூறி போதனு மொழியில் பெற்றோருக்கு உரிமையளிக்கும் யோசனையை ஒன்று சேர்ந்து வன்மையாக எதிர்த்தன.

போதனு மொழியில் பெற்றோருக்கு உரிமை அளிக்கும் யோசனையைக் கல்வி அமைச்சர் தமது கல்வி மசோதாவில் கைவிட்டுவிட்டார் வரட்டுப் பிடிவாதம் பிடிக்காமல் நிலைமையை உணர்ந்து தமிழ்ப் பிரதிநிதிகளினதும் தமிழ் மக்களினதும் ஆட்சேபத்தை ஏற்று தாய் மொழியையே போதனு மொழியாக்குவதற்கு சம்மதித்ததற்காக கல்வி அமைச்சரைப் பாராட்டவேண்டும். இதே சமயம் தமிழ் மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கும் தமிழரசுக்கட்சியினரும் தமிழ்க்காங்கிரஸ் கட்சியினருக்கும் இது ஓர் எடுத்துக்காட்டாக விளங்கவேண்டும். தமிழ் மக்களைப் பாதிக்கும் இதர விஷயங்களில் எல்லாம் இரு கட்சியினரும் ஒன்று சேர்ந்து முயற்சி செய்தால் நிச்சயம் வெற்றி கிடைக்கும் என்பதையே போதனுமொழி விஜயம் எடுத்துக்காட்டுகிறது.

போதனு மொழிப் பிரச்னை சுமுகமாகத் தீர்க்கப்பட்டுவிட்டது. இதே மனப்பான்மையுடன் கல்வி அமைச்சர் மட்டுமல்ல இதர அமைச்சர்களும் நடந்துகொண்டால் மக்களுக்கும் வீண் தொல்லை ஏற்படாது; அரசாங்கத்துக்கும் தலையிடி குறையும்.

ஐந்தாமவகுப்பிலிருந்து ஆங்கிலம் இரண்டாவது கட்டாய பாடமாகப் படிக்கவும் இந்தமசோதா வகைசெய்கிறது ஆங்கிலத்தின் அவசியத்தை வலியுறுத்திவந்தவர்கள், இங்கு ஆங்கிலத்தின் தரம் குறைந்து வருவது கண்டு கவலை தெரிவித்து வந்தனர். ஆங்கிலத்தை இரண்டாவது கட்டாய மொழியாக்கும் யோசனையை, ஒரு சிலர் அரசியல் நோக்கத்துடன் எதிர்க்க முன்வரலாம். ஆனாலும் இதற்கு நாட்டில் நிச்சயம் நல்ல வரவேற்புக்கிடைக்குமென்று சொல்லலாம்.

சிங்களப் பிள்ளைகள் தமிழ் மொழியையும் தமிழ்ப்பிள்ளைகள் சிங்கள மொழியையும் மூன்றாவது இஷ்டபாடமாகப் படிப்பதற்கும் கல்வி மசோதா வகைசெய்கிறது. இது தமிழ்ச் சமூகத்துக்குப் பெரும் நன்மைசெய்யுமென எதிர்பார்க்க முடியாது. தமிழ்ப் பிள்ளைகள் சிங்களத்தை விரும்பிப் படிப்பார்களா? ஆனால் சிங்களப் பிள்ளைகளில் எத்தனைபேர் தமிழை விரும்பிக் கற்கப்போகிறார்கள்? என்றாலும் தமிழ் என்றதுமே அதன்மீது துவேஷம் காட்டியவர்கள் இன்று தமிழையும் சிங்களப் பிள்ளைகள் இஷ்டபாடமாகக் கற்பதற்கு வழிசெய்ய முன்வந்திருப்பது எதிர்காலம் பற்றி நம்பிக்கையளிப்பதாகும்.

கல்வி மசோதாவின் இதர அம்சங்கள் பற்றி பின்னர் ஆராய்வோம்.

நிறவெறிக் கொடுமையை நீக்க உழைத்த வீரர்

— ச. கந்தையா —

[செயலாளர், கென்னடி இளைஞர் அபிருத்திக் கழகம், தொல்புரம்]

அமெரிக்காவில் நிறவெறியை ஒழித்துக்கட்டும்பணியில் தனது உயிரையே அர்ப்பணித்த முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் அமர தினம் இன்று உலகின் பல பகுதிகளிலும் அனுஷ்டிக்கப்படுகிறது. பாகுபாடற்ற சமுதாயத்தைச் சிருஷ்டிக்கும் பணி மேற்கொண்ட அவர் ஞாபகார்த்தமாக இங்கு இக்கட்டுரை வெளியாகிறது.

இளமையிலிருந்தே நல்ல கொள்கைகளைக் கடைப்பிடித்த அமெரிக்க ஜனாதிபதிப்பதவி ஏற்றதும் தமது உள்ளத்தில் பொதிந்து கிடந்த கொள்கைகளைச் செயல்படுத்தியவர் திரு. கென்னடி.

1941-ல் யுத்த அபாயம் பெருகியபொழுது கடற்படையில் சேர்ந்து 1943-ல் மோட்டார் டார்பிடோபடகுப் படையின் தலைவராகப் பொறுப்பேற்றுப் பல தீரச் செயல்களைச் செய்த இவர் இதன் காரணமாக அமெரிக்க கடற்படை விருது, பதக்கம், பாராட்டுப் பத்திரம் ஆகியன வழங்கப் பெற்று அதிகாரபூர்வமாகப் பாராட்டப்பட்டவர்.

தனது 29வது வயதில் 1947-ம் ஆண்டுதொடக்கம் 1947-ம் ஆண்டுதொடக்கம் செனட்டராகும்வரை தொடர்ந்து ஆறுவருடம் பிரதிநிதிகள் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பல பிரச்னைகளில் பங்கு கொள்ளக்கூடிய பதவியான செனட்டர் பதவிக்குவர ஆவல்கொண்ட இவர் குடியரசுக்கட்சியைச் சேர்ந்த ஹென்ரி கபொட்லாட்ஜுடன் போட்டியிட்டு 1953 ஜனவரி 3-ம் நாள் செனட்டராக உறுதிமொழி ஏற்றார். அங்கு இவர் ஆற்றிய சொற்பொழிவுகள் யாவருடைய கவனத்தையும் ஈர்ந்ததுமல்லாமல் மிகுந்த புகழ் மிகவராகவும் விளங்கினார்.

மக்கள் சேவை

பிரதிநிதிகள் சபை உறுப்பினராக இருந்தபோது வாஷிங்டனில் ஒரு விருந்தில் கலந்துகொள்ளச் சென்ற இவர் பிரஞ்சு அதிபர் டி கோலாலும், சோவியத் பிரதமர் குருஷ்சேவாலும் கிறப்பாக ஆழமை எடுத்துக் கூறப்பட்ட பல்கலைக்கழக மாணவியான ஜாக்குலின் மீது காதல்கொண்டு மற்றக் காதலர்களைப்போல ஆடம்பரப்பொருட்களைக்கொடாது வரலாற்று நூல்களைத் தன் காதலிக்குப் பரிசாக வழங்கி புதுமையைக்கையாண்டார். 12-9-54ல் பாஸ்டன் நகர ஆர்ச்பிஷப்அவர்களால் மரியன்னை ஆலயத்தில் இருவருக்கும் திருமணம்நடைபெற்றது. ஓராண்டு இன்பமாக வாழ்க்கை நடந்துகொண்டிருக்கையில்இளமையில் கால்பந்தாட்டத்தின் போது ஏற்பட்டகாயத்தலும்அதே இடத்தில் யுத்த காலத்தில் ஏற்பட்ட காயத்தாலும் ஊன்றுதடிகளையே உபயோகித்து நடக்கவேண்டிய நிலையேற்பட்டது. இதன் காரணமாக இருமுறை அறுவை சிகிச்சை செய்யப்பட்டகர். இதற்காக ஓய்வு எடுத்து இருந்தபொழுது ஒரு நூலை வெளியிட்டார். அதற்கு முன்னுரை வழங்கிய கொலம்பியா பல்கலைக்கழகப் பேராசிரியர் இந்நூல் உண்மையான மக்கள் சேவையென அதில் குறிப்பிட்டுள்ளார்.

அமைதிப் பணி

உலக அமைதியே தன் குறிக்கோளாகக் கொண்ட கென்னடி அமைதிக்காக உழைத்துவந்தார். உலக அமைதி, அணுவாயுத சோதனைநிறுத்தல் ஆகியவற்றுக்கான வழிவகைகளை ஆராய்ந்து 25-9-61ல் ஐக்கியநாடுகள் சபையில் தனது திட்டத்தை வெளியிட்டார். அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன் ஆகிய நாடுகட்குட்பட்ட அணுஆயுத சோதனைத் தடை ஒப்பந்தத்தைச் செய்து 1963 அக்டோபர் 7ல் கைச்சாத்திட்டார்.

இவர் பிரச்னைகளில் மிகுந்த ஞானசக்தி உள்ளவர் என்னடி படிக்கும் காலம்முதல் இறக்கும்வரை இன, மத, நிற பேதமின்றிச் சகலருடனும் சமமாகப் பழகினர். நிறம், இனம் ஆகியவற்றின் பேரில் பொதுஇடங்களில் சமவாய்ப்புக்கொடுக்கப்படுவதை எதிர்க்கும் கொடுமையை ஒழித்துக்கட்ட விரும்பி ஆப்பிரகாம்லிங்கனுக்குப் பிறகு குடியுரிமை மசோதாவைத் தயாரித்து அம்முயற்சியில் தமதுயிரையே அர்ப்பணித்தவர் கென்னடி. மனித உரிமைகாவலராகவும் உலக அமைதியின் தலைவராகவும் விளங்கிய இவர் 1963-ம் வருடம் நவம்பர் மாதம் 22-ம் நாள் குடியுரிமை மசோதாவிற்கு ஆதரவு திரட்டுவதற்காக, டெக்ஸாஸ் மாநிலத்தில் பவனிவருகையில் கொடிய வன்ஒருவனின்துப்பாக்கிக்கு இலக்காகி அமரத்துவமெய்தினர்.

இன்றைய பலன்

22-11-67
புதன்கிழமை
கார்த்திகை மாதம்
6-ந் திகதி

நட்சத்திரம்- புனர்பூசம் பகல் 11-03 மேல் பூசம்.

திதி- பஞ்சமி. பி.ப. 3-36 மேல் ஷஷ்டி.

சுபநேரம்- 4-40—6-10.

ராகுகாலம்- 12-10—1-40.

மேஷம் - உள்ளப்படுதாவில் உவகைக் கூத்து

ரிஷிபம்- இனமும் சேரும் இலாபமுமுண்டு.

மிதுனம்- விழிகள் குணமாகும் விரக்திநிலை.

கடகம் - மலையைக்கல்லி எலியைப்பிடித்தல்.

சிம்மம்-கற்றதாலபயன் கடவுள் நம்பிக்கை.

கன்னி- துஷ்டர் உறவு, தூரத்துச் செய்தி.

துலாம்-மந்தகாசவாழ்வு, மனச்சிறப்பு.

விருச்சிகம்- பூமி விருத்தி புதிய திருப்பம்.

தனுசு-ஏகாந்தநிலை, எதிர்பாராத முடை

மகரம் - அன்புப் போர் தொடுக்க அசைந்துவரும் அழகுத் தேர்.

கும்பம்-இருண்டநிலை இதயத் துடிப்பு.

மீனம்-புண்ணிய விருப்பு, பொறுமையுமுண்டு.

—சோதிடக் கலாநிதி—
திருமலை வேலுப்பிள்ளை

ஐந்தொழிற் பொருளாக அநவரத தாண்டவஞ் செய்தருளும் நடராஜமூர்த்திக்கு ஆண்டு தோறும் ஆறு அபிஷேகங்கள் செய்யப்பட வேண்டும். அவற்றுள் மூன்று திதியை அடிப்படையாகக் கொண்டவை. மற்றைய மூன்று நட்சத்திரத்தை அடிப்படையாகக் கொண்டவை எனக் காமிகம் காரணம் என்றும் இருஆகமங்களும் கூறுகின்றன.

ஆவணி, புரட்டாதி, மாசி ஆகிய மூன்று மாசமும் பூர்வபக்கச் சதுர்த்தசியிலே நடராஜ அபிஷேகம் செய்யப்படவேண்டியது. சித்திரை மாசம் திருவோணத்திலும், ஆலி மாசம் உத்தரத்திலும், மார்கழி மாசம் திருவாதிரையிலும் நடராஜ அபிஷேகம் செய்யப்பட வேண்டும். ஆகவே, மார்கழி மாச அபிஷேகம் நட்சத்திர முதன்மையுடையது என்பது தெளிவாகும்.

ஒரு மாசத்தில் இரு நட்சத்திரங்கள் வர நேர்ந்தால் பிந்தியதையே கொள்ள வேண்டுமெனக் காரணம், காமிகம் ஆகிய இரு ஆகமங்களும் கூறுகின்றன.

இனி, மிருகசிரிடமும், திருவாதிரையும், சதுர்த்தசியும் ஒரே நாளில் அமைந்தால், அன்று அபிஷேகம், பூஜை முதலியன செய்யலாகாது. அப்படிச் செய்தால் நாடு நோயினால் பீடிக்கப்படும். ஆகவே, நடராஜப் பெருமானுக்கு உரிய திருவாதிரை அபிஷேக தரிசனங்களை அடுத்த நாளை கைக்கொள்ளவேண்டும் என உத்தர காரணாகமம் கூறுகிறது.

இப்பிலவங்க வருடம் மார்கழி மாசம் 29-ந் திகதி சனிக்கிழமை இரவு 9 மணிக்குச் சதுர்த்தசி கூடுகிறது. அன்று இரவு 12 மணி வரையும் மிருகசிரிட நட்சத்திரம் இருக்கிறது அதன் பின் இரவு முழுவதும் திருவாதிரை இருக்கிறது. ஆகவே, முன்காட்டியபடி மார்கழி 29-ந் திகதி சனிக்கிழமை இரவு அபிஷேகமோ, தரிசனமோ செய்யலாகாது. ஆகவே, அடுத்த நாளாகிய ஞாயிற்றுக்கிழமையே கொள்ள வேண்டும். ஆனால், அந்த ஞாயிறு மாலை 6 மணிக்கு மகர சங்கராந்தி ஏற்படுகிறது. ஆகவே, அந்தத் திருவாதிரை நாள் குற்றமுடையதாகிறது. எனவே, குற்றமற்ற முந்தின திருவாதிரையாகிய மார்கழி மாசம் 2-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு அபிஷேகமும், 3-ந் திகதி திங்கட் கிழமை உதயம் ஆர்த்ரா தரிசனமுமே கொள்ள வேண்டுமென்பது சாஸ்திர சம்மதமாம்.

மேலும், மார்கழி மாசம் 2-ந் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 4 1/2 மணி வரை மிருகசிரிடமும், அதன் பின் திருவாதிரையும் அமைந்து சதுர்த்தசி கூடாமல் பிரதமை திதியாவதாலும், மார்கழி மாசம் 2-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆர்த்ராபிஷேகம் செய்வதற்குக் குற்றமற்றது என்பது உறுதியாம்.

திதி பூர்வ பட்சமாக அமையவேண்டுமென்பதே விதியாகும். அவ்விதி அமையாது. ஒருமாசத்தில் தேய்பிறை மற்ற இது நட்சத்திரங்கள் நட்சத்திரத்துக்கு வருமாயின்பிந்திய நட்சத்திரத்தைக்கொள்ளவேண்டுமென்பதே ஆகமநூல் முடிபாகும். அதுவேயன்றி தோஷமில்லாத முந்திய நட்சத்திரத்தை விட்டு தோஷமுள்ள பிந்தியதை ஏற்கவேண்டும் என்பது ஆகம சாத்திர சம்மதமாகாது.

இன்னும், திருவாதிரை நட்சத்திரம் சங்கிராந்தியுடன் சேருமாயின் முந்தின நட்சத்திரத்தையேகொள்ளவேண்டும். சங்கிராந்தி தோஷமிருந்தால் அன்றையதினம் ஒருபோதும் அபிஷேகம், பூஜை முதலியன செய்யலாகாது. அப்படிச்

ஆசிரியருக்குக் கடிதங்கள்

மார்கழி 2 திரு

செய்தால் செய்பவனு செய்விப்பவனு துன்பம் அடைவர். அபூர்வமாகச் செய்ய நேர்ந்துவிட்டால் சம்புரோட்சணம் அபிஷேகம் செய்யவேண்டும். இது காமிகாகமக் கிரியாபாதம், மண்லார்ச்சனை விதி 45-படலம் 1325-வது சுலோகத்தில் காணப்படுகிறது.

ஆகவே, இதனாலும் இந்வருடம் மார்கழி மாச 2-ந் திகதி ஞாயிற்றுகிழமை இரவு நடராஜ அபிஷேகமும் அடுத்து வருசூரியோதயத்தில் தரிசனமும் கொள்ளவேண்டுமென்பது நிச்சயமாகிறது.

ஆர்த்திரா தரிசனத்துக்கு மூலஸ்தானமாக மதிக்கப்படும் சிதம்பரத்திலே இந்வருடம் மார்கழி மாச 29-ந் திகதி சனிக்கிழமை

முந்தியதை

மார்கழி மாதத்தில் திருவாதிரை நக்ஷத்திரத்திற்குப் பத்துத்தினங்களுக்கு முன் ஷஷ்டி திதியிலாவது நக்ஷத்திரத்தில் விநாயகரைப்பூசித்துவிரதம் அனுஷ்டிக்கவும்; திருவாதிரைக்கு முன பத்தாவது தினத்தில் சதயம் வரினுவராவிடினும், திருவாதிரைக்கு முன் பத்தாவது நாளில் திருவாதிரை விரதத்தை ஆரம்பிக்கவுமென்று யோஜாகமமும்;

மார்கழி மாதத்தில் சதயம் சேர்ந்த ஷஷ்டியில் அல்லது ஷஷ்டி சேராதிருப்பினும், விநாயகரைப் பூசித்து திருவாதிரை விரதத்தைத் தொடங்குகவென்சுக்குமாகமும்;

மார்கழி மாத சுக்கி பக்ஷ ஷஷ்டியும் சதயமும் சேர்ந்த தினத்தில், மோதகம், நெல்மலர், அன்வகை ஆதிய நிவேதனப் பொருட்களைப் படைத்து நிவேதித்து பூஜிக்கவும். ஷஷ்டி கூடினுலுங் கூடாவிடினும் நக்ஷத்திர பிரதானம் ஆகையால் சதயம் முதல் திருவாதிரை ஈறுக விரதமனுஷ்டிக்கத்தக்கதெனவும்விநாயகரை பூஜித்துத் திருவாதிரை விரதத்திற்குக் காப்புக் கட்டல் வேண்டும் எனவும் காரணகமும் செப்புகிறன.

தேவர்களுக்கு உத்தராயண புண்ணியகாலம் ஆ

இரகுநாதை

இவ்வருடம் மார்கழி திருவாதிரை மார்கழிமாத 3-ம் திகதி குறித்திருகிறோம். அது காமிகாகமம் முதலிய சாஸ்திரங் பந்தமானது. ஒரு மாதில் இரண்டு நக்ஷத்திரம் வந்தால் பிந்திய நக்ஷத்ரமே முக்கியமாகக்கொள்ளவேண்டியதுஎன்பது பொவிதி. ஆனால் இவ்வருடில் மார்கழி மாதம் 30திகதி திருவாதிரை 47-வரை நிற்கிறது. தைச் கிராந்திஅன்று 30-14வநிகழுகிறது ஆகவே திருவாதிரை மார்கழிக்குதைக்கும் பங்குபட நக்ஷத்திரமாகுமன்றி மாகழிக்குமட்டும் உரியகாது. இது சங்கிரமதோமுடையதாய் இருப்பதா 3-ந் திகதி வரும் திருதிரையே சாஸ்திரமுறைபடிகொள்ளப்பட வேண்மென்பதும், பிந்திய திவாதிரை சுத்தமான மாகழித் திருவாதிரை ஆகாபடியால் அது கொள்படக்கூடாதென்பதும்தெவாகத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்குக் கடிதங்கள்

கழி 2-ந் திகதியே திருவாதிரை

செய்பவனும் வி ப் ப வ னு ம் டைவர். அபுத்தி செய்ய நேர்ந்து சம்புரோட்சன செய்யவேண் காமிகாகமம், பா தம், மண்ட விதி 45-ம் 1325-வது சுலோ ணப்படுகிறது.

இதனலும் இந்த மார்கழி மாசம் தி ஞாயிற்றுக் இரவு நடராஜ மும் அடுத்து வரும் த்தில் தரிசன ள்ளவேண்டுமென மாகிறது.

ா தரிசனத்துக்கு ாமாக மதிக்கப் ம்பரத்திலே இந்த மார்கழி மாசம் தி சனிக்கிழமை இரவு அபிஷேகமும் அடுத்து ஞாயிறு காலே தரிசனமும் கொள்வதற்கு இந்த த் தோஷங்கள் அமையமாட் டாவா என்ற ஐயம் நிகழ லாம். அங்கு அப்படிச் செய் வதற்கும் விதி காமிகாகமத் தில் இருக்கிறது.

நிருத்த மூர்த்திக்குக் கொடியேற்றி விழா நடை பெறும் இடங்களில் பிந்திய முக்கூட்டுக் குற்றம். சங் கிராந்திக் குற்றம் முதலியன தோஷமாகாது. சிதம்பரத் தில் கொடியேற்றுவிழா நடைபெறுவதனல் அங்கு அது குற்றமல்ல. அப்படி யல்லாது அபிஷேகம் நடை பெறும் இடங்களில் குற்ற மில்லாத நாளேயே கைக் கொள்ளவேண்டும்.

க. வை. ஆத்மநாதசர்மா.
யாழ்ப்பாணம்.

தியதையே கொள்க!

மாதத்தில் திரு நக்ஷத்திரத்திற் துத்தினங்களுக்கு க் திதியிலாவது திரத்தில் து ப்பூசித்துவிரதம் கவும்; திருவாதி ண பத்தாவது சதயம் வரினும் ம், திருவாதிரை த்தாவது நாளில் ர விரதத்தை வுமென்று யோக

மாதத்தில் சத ஷஷ்டியில் அல் சேரா திருப்பி ாயகரைப் பூஜி ாதிரை விரதத் ாடங்குகவென்று மும்;

மாத சுக்கில டியும் சதயமும் னைத்தில், மோத ல்மலர். அன்ன ிய நிவேதனப் ப் பணைத்து பூஜிக்கவன ஷ்டி கூடினலும் வும் நக்ஷத்திரம் ஆகையால் சத ல் திருவாதிரை ரதமனுஷ்டிக்கத் வும்விநாயகரைப் திருவாதிரை விர காப்புக் கட்டு டும் எனவும், ம் செப்புகின் ளுக்கு உத்தரா ணியகாலம் உத யம். சித்திரை விஷு புண் ணியகாலம் மத்தியானம். தக்ஷிணுயன புண் ணிய காலம் அஸ்தமயனம். ஐப் பசி விஷு புண்ணிய காலம் அர்த்தயாமம். அர்த்தயா மத்தின் பின் திருக்கார்த் திகையில் விளக்கேற்றி, விநாயக விரதத்தினை ஆரம் பித்து, உஷக்காலமாகிய மார்கழியில் வரும் ஷஷ்டி யில் அல்லது சதயத்தில் விநாயகரைப் பூஜித்துத்திரு வாதிரை விரதத்தை ஆரம் பித்தலே முறையாகும்.

எனவே கார்த்திகை விள க்கீடு, விநாயக விரதம், திருவாதிரை விரதம் என் னும் விரதங்கள் ஒன்றே டொன்று சம்பந்தப்பட் டவை என்பது புலனுகின் றன. விநாயக ஷஷ்டி விர தம் சாந்திர மாத விரதம் மார்க்கசீர்ஷ சுத்தத்திலே வருவது.

ஒரு மாதத்திலே இரு முறை நக்ஷத்திரம் வந்தால் பிந்தியதிற் செய்தல் உத் தமமெனின், பிந்தியது சங் கிராந்தி சம்பந்தமாயிருப் பின் முந்தியதிற் செய்க என்று ஆகம வசனங்கள் கூறுகின்றன. ஆகையால் இவ்வருஷம் மார்கழிமாதம் மூன்றுந் திகதி திங்கட் கிழமை யன்றே ஆருத்ரா தரிசனம் கொள்ளுதல் சரி யானது.

ச. குமாரசுவாமிக் குருக்கள்,
அச்சுவேலி.

தநாதையர் விளக்கம்

டம் மார்கழித் ர மார்கழிமாதம் தி குறித்திருக் அது காமிகாக ப சாஸ்திர சம் து. ஒரு மாதத் டு நக்ஷத்திரம் ந்திய நக்ஷத்தி யமாகக்கொள்ள ுஎன்பது பொது ல் இவ்வருடத் ழி மாதம் 30-ம் வாதிரை 47-09 றது. தைச் சங் ன்று 30-14வரை ஆகவே இத் ர மார்கழிக்கும் பங்குபட்ட ாகுமன்றி மார் டும் உரியதா சங்கிரமதோஷ ய் இருப்பதால் வரும் திருவா சாஸ்திரமுறைப் ாப்பட வேண்டு , பிந்திய திரு த்தமான மார் ாதிரை ஆகாத அது கொள்ளப் தென்பதும்தெளி ரிகிறது.

மார்கழி மாதந்தன்னில் வருவிநாயகநோன்பிற்குப் பேருறுபத்தாநாளிற்பித்தனு ளுவாவுங்கூடிற் சிறுறு சிதம்பரத்திற்றிரு நடர்விரதமாகுஞ் சாருறுதுயிலாணித்துச னனநோய் தீருவாயே.

இச்செய்யுளின்படி விநா யக சஷ்டி விரதத்துக்கு பத் தாவது நாளேயடுத்துவரும் திருவாதிரையே மார்கழித் திருவாதிரை என அனுட் டிக்கப்படவேண்டியது.

இ. சி. இரகுநாதையர்
சோதிடபரிபாலனமடம்,
கொக்குவில்.

புதிய சுகாதார வைத்தியஅத்தியட்சகர்

கொழும்பு, செவ் டாக்டர் டி. ஏ. தாபோ தரம் கொழும்பு பகுதிக்கு சுகாதார வைத்திய அத்தி யட்சகராக நியமிக்கபப ட்டுள்ளார். இவர் யானைக் கால் நோய் தடுப்புப்பகுதி யில் கடமையாற்றியுள்ள வர் என்பது குறிப்பிடத் தக்கது.

நாட்டின் நிர்வாகத்தில் பொதுமக்கள் நிலை

அவரும் எழுதினர்

அரசாங்க இலாகாக் களில் நடைபெறும் வேலை கள் யாவும் நத்தை வேகத் திலேயே சென்றுகொண்டி ருப்பதை இவ்இலாகாக்களு டன் தொடர்புகொண்டவர் கள் எவரும் மறுக்கமாட் டார்கள். தாமத வேலை முறையும் சிவப்பு நாடாகட் டுப்பாடும் பொதுமக்களின் மனதை குழப்புவதுடன் அர சாங்கத்தையே கண்டிக்கு மளவிற்கு எங்கள் நாட்டில் மலிந்துவிட்டன. குறிப் பிட்ட நேரங்களில் சில ஊழி யர்கள் வேலைத்தலங்களில் இல்லாதிருப்பது அல்லதுசிற் றுண்டிச்சாலைகளிலிருந்து அரட்டை அடித்துக்கொண் டிருப்பது போன்ற சம்பவங் கள் நிர்வாக கட்டுக்கோப் பைசீர்குலைத்துவிட்டது என் பதை நாம் கூறித்தான் தெரியவேண்டியதில்லை. நிர் வாகம் அரசாங்க உத்தியோ கத்தர்களின்பொறுப்பு இத ற்கும் மந்திரிமார்களுக்கும் உள்ள தொடர்புமிகக் குறைவு. அரசாங்க கொள் கையை நிர்ணயிப்பதுதான் அவர்கள் பொறுப்பு. ஆனல் நம்நாட்டில் உள்ள நிர்வா கம் பலகோணங்களில் செல் வதால் மந்திரிமார்களே வேலைத்தலங்களுக்கு சென்று ஊழியர்களின் கடமைகளை கவனிப்பார்கள் என்று பத் திரிகைகளில் செய்தி வெளி யாகியுள்ளது ஆச்சரியமா யிருக்கிறது. நிர்வாகபொறு ப்புகளை மந்திரிமார்களே கவ னிக்கவேண்டிய நிலைஏற்படு மானல் நாட்டின் வளர்ச் சிக்கு அது ஒரு நல்ல அறி குறியாக தெரியவில்லை.

நாள்தோறும் கச்சேரி, காரியாதிகாரி கந்தோர், மக் கள் வங்கி. பொதுமராமத்து இலாகா, தொழில் இலாகா போன்ற அரசாங்க காரியா லயங்களில் தங்கள் வேலை களை செய்வதற்காக தவம கிடக்கும் பொதுமக்களைப் பார்த்தால் அவர்கள் பரிதா பத்திற்கும் அனுதாபத்திற் குமுள்ளவர்களாகவே எம க்கு தோன்றும் ஒரு சிறு விஷயத்தை முடிப்பதற்கும் நாள் முழுவதையும் செல வழிக்கவேண்டிய துர்ப்பாக் கியநிலை நமது நாட்டில் தோன்றியுள்ளது. அரசாங்க இலாகாக்களில் கடமைபுரி யும் சில ஊழியர்கள் தாங் கள் பொதுமக்களின் பணி யாளர்கள் என்பதைமறந்து கடமையாற்றுவதினல் தான் இக்கதி ஏற்பட்டுள்ளது. எக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் நிர்வாகம் துரிதமாக நடை பெறவேண்டும், மக்கள் தேவைகளுக்கு முதலிடம் கொடுக்கப்படவேண்டுமென் பதை அரசாங்க ஊழியர்கள் நிலையில் நிறுத்திகொள்வது அவர்களுக்கும் நாட்டிற்கும் நல்லது. சில அரசாங்கஉயர் உத்தியோகத்தர்கள் நிரந் தர அரசியல் வாதிகளாக நடப்பதன் காரணத்தினு லேயே உணவு உற்பத்தி இயக்கம், நிர்வாக சிக்கல் கள் போன்ற பிரச்னைக்களில் பிரதமர் தலையிடவேண்டிய நிலைமை உருவாகியுள்ளது

இதனை தவிர்ப்பதற்கு மந் திரிமார்கள் மாத்திரம் பிர யத்தனம் செய்தால் மட்டும் போதாது. ஒர் இலாகாவில் வேலைசெய்யும பியோன் முதல் உயர் அதிகாரிவரை இதனை செயல்படுத்தவேண் டும் அத்துடன் நில்லாது பொதுமக்களுக்கு சிக்கல்கள போட்டு இலாகாக்களில் வேலைகளை மேலும் மேலும் தாமதப்படுத்தாது துரிதப் படுத்தப்படல்வேண்டும்.

உதாரணமாக ஒரு தபால் பெட்டியொன்றை நிறுவுவ தற்கு தபால் இலாகாவுடன் மேற்கொள்ளப்பட்ட நட வடிக்கையை இங்கே குறிப் பிடுவது நிர்வாகத்தின் 'திற மையை'யும் 'சிவப்பு நாடா' முறையையும் பொது மக்க ளுக்கு உணர்த்துவதாக அமையும்.

பொதுமக்களின் கஷ்டத் தை உணர்ந்த சமூக ஸ்தா பனம் இச்சந்தர்ப் பத்தைவிடுமா? செலவை பொறுப்பேற்கு மென 12-7-66-ல் திருப்பி பதில் எழுதியது. பின்னர் பதில் இல்லை. 22-8-66-ல் மீண்டும் ஞாபகமூட்டிக் கடிதம். 31-8-66-ல் பின்னரும் மற் ருேர் கடிதம் 7-9-66-ல் தபால் பெட்டியை விரை வில் நிறுவும்படியும் பொது மக்கள் கஷ்டப்படுகின்றன ரென்றும் தபால்அதிகாரிக்கு உணர்த்தப்பட்டது.

தங்கள்கடிதத்திற்கு நன்றி தபால்பெட்டி விரைவில் நிறுவுவதற்கு அங்கிகரிக்கப் பட்டுள்ளதென 3-9-66-ல் தபால் அதிகாரி அறிவித் தார். இதன் பின்னர் இலாகாமௌனம். 21-9-66 சமூக ஸ்தாபனம் காலதாம தம் பற்றி குறிப்பிட்டு விரை வில் தபால் பெட்டியை நிறு வகோரியது. பதில்இல்லை. மீண்டும் 15-10-66-ல் கடி தம் பின்னர் தபால் இலாகா 19-10-66-ல் பின்வருமாறு தெரிவித்திருந்தது: தங்கள் 15-10-66. கடிதத்தின் பிர காரம் தபால் பெட்டி பெறு வதற்காக கொழும்பிலுள்ள களஞ்சியப்பகுதி பொறி யியலாளரிடம் 'ஆடர்' கொடுத்துள்ளோம். அவ ரிடமிருந்து கிடைத்ததும் தபால்பெட்டி நிறுவுவோம். 6-11-66 24-12-66 ஆகிய திகதிகளிலும் கடிதங்கள் எழுதப்பட்டன. பதில் இல்லை. பின்னரும் 16-12-66 ல் தபால் இலா காவிற்கு கடிதம் வருடமும் முடிந்துவிட்டது. தபால் பெட்டி நிறுவியபாடில்லை. 5-1-67 ல் மீண்டும் கடிதம் எழுதப்பட்டது. நடவடி க்கை இல்லை. 20-1-67 ல் திரும்பவும் கடிதம். பதில் கிடைக்காததால் பொறுமை யிழந்து சமூக ஸ்தாபனம் நீண்ட கடிதமொன்றை 1-2-1967 ல் தபால் இலா காவிற்கு எழுதியது.

6.2-67 ல் தபால்இலாகா பின்வரும் பதிலை எழுதியி ருந்தது. தபால் பெட்டியை பெறுவதற்கான 'ஆடரை' புதுப்பித்துள்ளேன். இரு ம்பு சட்டங்கள் களஞ்சியத் தில் இல்லாததால்தான் தாமத மேற்பட்டுள்ளது. களஞ்சியத்திலிருந்து தபால் பெட்டிகிடைத்ததும் அதனை நிறுவுவோம். முன்னர் தாங் கள் எழுதிய கடிதங்கள் கிடைத்தன என்பதை உறு திப்படுத்துகின்றேன். தாம தத்திற்காக வருந்துகின் றேன்.

கொழும்பில்தான் தாமத மென்பதை உணர்ந்த சமூக ஸ்தாபனம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு 7-2-67-ல் ஓர் தந்தியை கொழும்பிற்கு அனுப்பியிருந்தது. யாழ்.

ஆலை...

தபால் அதிகாரி 4-3.67-ல் தபால்பெட்டி விரைவில் நிறுவப்படுமெனவும் தாம தம் களஞ்சியப்பகுதியில் தான் என்றும் கடிதமூலம் தெரிவித்திருந்தார். இதற் கிடையில் கொழும்பிற்கு அனுப்பப்பட்ட தந்திக்கு பிரதம தபால் அதிபர் பி

மீண்டும் 13-3-67-ல் தெரி வித்திருந்தார்: தங்க தந்தி கிடைத்தது. இரும்புச் சட்டங்கள் இருப்பில் இல் லாததன் காரணத்தினு லேயே தபால்பெட்டி நிறுவ முடியவில்லை. இவை கிடை

[8ம் பக்கம் பார்க்க]

இவரும் எழுதினர்

ஸ்ரீமான் பொதுஜனம்

பனம் ஒரு குறிப்பிட்ட பகுதி யில் ஒரு தபால் பெட்டி நிறு வப்படவேண்டிய அத்தியா வசியத்தை வலியுறுத்தி. 12-5-66-ந் திகதி யாழ்ப்பா ணம் தபால் பகுதி அதிகாரி க்கு ஓர் கடிதம் எழுதியிருந் தது. அதற்கு பதிலாக அதி காரி கையெழுத்திட்ட திகதி யிடப்படாத கடிதம் 17-5-66-ல் அனுப்பப்பட்டி ருந்தது. அக்கடிதத்தில்தெரி விக்கப்பட்டிருந்ததாவது: ''தங்கள் 12-5-66-ந் திகதி கடிதம் கிடைத்தது. அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மீண்டும் தொடர்பு கொள்ளும்பொ முதுகுறிப்பு எண்முதலிய னவற்றை குறிப்பிடவும்'' இதனைக் கண்டதும் விரை வில் காரியம் முடிந்துவிடு மெனவும் பொதுமக்கள் குறைநீங்கிவிடுமெனவும் சம் பந்தப்பட்டவர்கள் எண் ணினர். பின்னர் 23-5-66ல் ஞாபகமூட்டி கடிதம் எழு தப்பட்டது. தபால்பெட்டி சம்பந்தமாக இன்னமும் கவ னிக்கப்படுவதாகவும் இறுதி முடிவு விரைவில் அனுப்பப் படுமெனவும் அதிகாரி 24-5-1966-ல் எழுதிய கடி தத்தில் தெரிவித்திருந்தார். பின்னரும் 21-6 66-ல் அ காரிக்கு நினைவூட்டி கடிதம் எழுதப்பட்டது

குறிப்பிட்ட இடத்தில் தபால்பெட்டி நிறுவுவதற்கு அங்கிகரிக்கப்பட்டால்அதன் செலவுகளை பொறுப்பேற்ப தற்கு முடியுமா என்பதை தெரிவிக்கும்படி பின்னர் தபால் அதிகாரி 26-6-66-ல் சமூக ஸ்தாபனத்திற்கு கடி தம் எழுதியிருந்தார். சமூக

இரட்டைப் பனை

யாழ்ப்பாணத்திலிருந்து கல்லுண்டாய் வழியாகவும், மானிப்பாய் தெருவாலும் பிரயாணம் செய்தவர்கள் பல வருடங்களாகக் கண்டு வந்த ஒரு முக்கியமான இயற்கைச் சின்னத்தை இனிமே காணமுடியாது. நாவாந்துறை, ஆனை கோட்டை, நவாலி, அராலி ஆகிய இடங்களில் வாழ்ப வர்களுக்கும் இது நன்கு பரிச்சயமான ஒரு காட்சி. ஏன், அல்லப்பிட்டி, மண் கும்பான் வாசிகளும் தைக் காணக்கூடியதா யிருந்தது.

நாவாந்துறை, காக்கை தீவு, அராலித்துறை முத லிய இடங்களிலிருந்து கடற் றொழிலுக்குப் போகிறவர் களுக்கும் இந்தச் சின்னம் ஒரு கலங்கரை விளக்கமாய் இருந்ததென்று கூறலாம்.

கந்தரோடையில் உற்பத் தியாகி நவாலி, கல்லுண் டாயில் கடலேரியுடன் சங் கமமாகிய வழுக்கியாறு அராலிப் பாலம் அடைக் கப்பட்டபின் 'ஆறு' என்ற பெயரை இழந்துவிட்டது. உப்பு நீர் வந்து நெல்வயல் களைப் பழுதாக்கப்படா தென்ற காரணத்தினல் தான் அராலிப் பாலம் மூடப்பட்டது. அத்துடன் யாழ்ப்பாணக் குடாநாட்டி லிருந்த ஒரே ஒரு இயற்கை ஆறும் நாமம் கெட்டுவிட டது! ஆயினும் அதன் படுக்கையை இன்றும் காணலாம்.

வழுக்கியாறுகடலேரியுடன் கலக்குமிடத்துக்குச் சற் றுத் தூரத்தில் சுரியும், சேறும் நிறைந்த இடத்தில் ஒரு சோடி பனைகள் நிலவுகொண்டிருந்த காலம் தொடக்கம் நின்று காவல் புரிந்தன. ஒரு நூற்றுண்டை எட்டிப் பார்க்கும் சில முதி யவர்களிடம் விசாரித்த போது இந்த இரட்டைப் பனை தாம அறியாத காலந்தொட்டு நிற்பதாகத் தெரிவித்தார்கள்.

ஒல்லாந்தர் யாழ்ப்பா ணத்தை ஆண்டபோது அவர்களுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்ததாகக் குற் றம் சுமத்தப்பட்ட பூதத் தம்பி முதலியார் இந்த இரட்டைப் பனையடியில் தான் சிரச்சேதம் செய்யப் பட்டாரென்றும் ஒரு கதை உண்டு. இது உண்மையா னல் அதன் வயது இரு நூற்றுக்கு மேலாகவும் இருக்கலாம். இதில் ஆச் சரியப்படுவதற்கு ஒன்று மில்லை. ஏனென்றல் சில பண்டைக்காலப் பனைமரங் களின் வயது எத்தனை யென்று எவருக்குமே தெரி யாது.

காதல் ஜோடியைப் போல அருகருகே நின்ற இந்த விருட்சங்கள் இன்று அடியற்று விழுந்த காட்சி யைப் பார்க்கும்போது நெடுங்கால நண்பர்கள் எம்மை விட்டுப் பிரிந்து விட்டார்கள் போன்ற நெஞ்சை அடைக்கும் உணர்ச்சி ஒன்று எழுகின் றது. வாழ்விலும் ஒன்றாய் வளர்ந்தன. தாழ்விலும் ஒன்றுபோ சரிந்து மடிந்தன. இதில் ஒரு விசேஷம் என்னவென்றல் இரட் டைப் பனையைச் சுற்றிப் புல்லும் பூண்டையும் தவிர வேறு பெரிய மரங் கள் இரண்டு மைல் சுற்றுட லுக்குள் கிடையாது. தன் னந்தனியன்களாக எத்தனை காற்றையும், வெய்யிலை யும், வெள்ளத்தையும், இடி மின்னலையும் தாங்கிக் கொண்டு இவை நின்றிருக் கின்றன என்பதை எண் ணிப் பார்க்கும்போது பேராச்சரியமா யிருக்கிறது. கச்சான் காற்று ஒருபுறம் இடிக்க, வாடை மற்றப் புறம் தள்ள, சோழகம் இன்னெரு புறம் இழுக்க எத்தனை விதமான கஷ்ட நிஷ்டூரங்களை அவை அனு பவித்திருக்கின்றனவோ!

உயிர் வர்க்கங்களில் மேலான பிறப்பு என்று கரு தப்படும் மனிதன் வெய்யி லைக் கண்டதும் நிழலுக்கு ஓடுகிறான், மழையைக்கண்ட தும்குடையை விரிக்கிறான், இடியைக் கேட்டதும்பயந்து ஒடுங்குகிறான். ஆனல், கேவ லம், தாவரப் பிறப்பெடுத்த இவ்விரு பனைகளும் எத்தனை இன்னல்கள்வந்தபோதிலும் ஒருவரையொருவர் பிரியா மலும், நம்பிக்கையும் தைரி யமும் இழக்காமல், வாழ்க் கையோடு போராடி, காலம் வந்தபோது இரண்டும் பிரி ந்தன.

இனிமேல் நாம் இரட் டைப் பனையடியை காண முடியாது. ஆயினும் அவை மனிதருக்கு ஓர் உதாரண மாய் விளங்கின என்பதை மறக்கலாகாது.

நாட்டிலும் நகரிலும்

— 'வழிப்போக்கன்' —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் விழாவும் சைவ மகாநாடும்

திருக்கேதிஸ்வரம், செவ்.

திருக்கேதிஸ்வரத்தில் ஆறுமுகநாவலர் விழாவும் சைவ மகாநாடும் வரும் வெள்ளிக் கிழமை நடைபெறவிருக்கிறது

ஆறுமுகநாவலர் மடத்தில் நடைபெறவிருக்கும் விழாவுக்கும் மகாநாட்டுக்கும் சைவபூஷணம் திரு. இ நம. சிவப்பிரகாசம் தலைமை தாங்குவார்.

காலை 8 மணிக்கு நாவலர் திருவுருவப்பட ஊர்வலம், 10 மணிக்கு திருக்கேதிஸ்வர ஆலயத்தில் விசேஷ அபிஷேகம், பகல் 12க்கு நாவலர் குருபூசையும், மகேசுரபூசையும்

பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும் சைவமகாநாட்டில் திரு. இரா. சண்முகரத்தினம் வரவேற்புரை நிகழ்த்துவார். திரு. இ. வைத்திலிங்கம், புலவர் அ திருநாவுக்கரசு, சைவப் புலவர் வித்துவான வ. செல்லையா, திரு. பி. சரவணமுத்து சாமியார், சைவப்புலவர் பண்டிதை நங்கம்மா அப்பாக்குட்டி, முத்தமிழ்மணி, பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை ஆகியோர் சொற்பொழிவாற்ற விருக்கிறார்கள். இன்னிசைக் கச்சேரியும் நடைபெறவிருக்கிறது.

விசாரணை நடைபெறும்

யாழ்ப்பாணம், புதன்

வேலைநேரங்களில் தொழிலாளர்களுக்கு ஏற்பலிம் விபத்துக்கள் சம்பந்தமாக வழங்கப்படும் நஷ்ட ஈடுகளும், ஏனைய கூட்டுஸ்தாபன ஊழியருக்குள்ள பிறவுநிலமைகளும் நசுக்கப்படுவதாக பரந்தன் இரசாயன கூட்டுறவு ஸ்தாபன ஊழியர்கள் முறையிட்டதைத் தொடர்ந்து அவற்றை விசாரணை செய்வதற்கு ஒரு விசேஷ அதிகாரி ஒருவர் அனுப்பப்பட விருப்பதாக தெரிகிறது.

யாழ்ப்பாணம் எம். பி. இதுவிஷம் சம்பந்தமாக திரு. ஜி. ஜி வொன்னம்பலம் கைத்தொழில் மந்திரி திரு பிலிப் குணவர்த்தனவுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் பின்னரே மந்திரி இப்புது அதிகாரியை அங்கு நியமித்துள்ளதாகத் தெரிகிறது. [வி. நி]

இந்தியாவில்.....

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்வேயாகும் என்பதை வலியுறுத்தினர்.

இந்தியாவுக்கும் மேற்கு ஜெர்மனிக்குமிடையே பல வேற்றுமைகள் இருந்தாலும் அவை இரண்டினதும் நோக்கம் உலகத்தில் சமாதானத்தை நிலைநாட்டுவதேயாகும் என்று அவர் கூறினர்.

இந்திராவின் பேச்சுக்குப் பதிலளிக்கையில், மேற்கு ஜெர்மனியை உணர்ந்து கொள்வதில் இந்தியா காட்டிவரும் அனுதாபபூர்வமான அக்கறைக்குத் தாம் நன்றிசெலுத்துவதாக மேற்கு ஜெர்மன அதிபர் டாக்டர் கெயிலிங்கர் கூறினார்.

தமது விஜயத்தின் மூலம், இரு நாடுகளுக்குமிடையே இருந்துவரும் நல்லுறவும், பொருளாதார, கலாச்சார ஒத்துழைப்பும் மேலும் வலுவடையுமெனத் தாம் நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

டாக்டர் கெயிலிங்கர், நேற்றுப் பிற்பகல், பிரதமர் இந்திராவுடன் தமது முதலாவது சுற்றுப்பேச்சுக்களை நடத்தினார். இன்று அவர், இரண்டாவது சுற்றுப்பேச்சுகளில் ஈடுபடுவார்.

வானொலி நிகழ்ச்சிகள்

சென்னை - 1

புதன் 22 - 11 - 67

காலை 6-00 - வந்தேமாதரம், 6-05- துதிப்பாடல்கள் 6-30 நிகழ்ச்சிக்குறிப்புகள், 6-35 அருள்வாக்கு, 6-45 இசைஅமுதம்—நாதஸ்வரம் காரைக்குறிச்சிஅருணாசலம், 7-15 தமிழில் செய்தி, 7-30 பாமாலை, 8-10 பாட்டு, 8-45 திரைகானம், 9-15 வயலின், 9-45 வாத்திய இசை, 10-55 ஆங்கிலத்தில் செய்தி, 11-55 பிராந்தியச்செய்திகள்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 கல்வி ஒலிபரப்பு, 1-00 பெண்ணுலகம், 1-30 வாத்திய கோஷ்டி, 1-45 திரைகானம், 2-00 தமிழில் செய்தி.

மாலை 5-30 பாடற்பயிற்சி, 5-45 மெல்லிசை.

இரவு 6-05 பிராந்தியச் செய்திகள், 6-15 நிகழ்ச்சிக் குறிப்புகள், 6-30 வாத்திய இசை, 6-45 திரைகானம், 7-15 தமிழில் செய்திகள், 7-30 நம்விவசாயிகளுக்கு, 8-00 சிறுகதையில் புதுமை, 8-15 கொத்தவால்சாவடி விளக்கச்சித்திரம், 8-45 ரேடியோ செய்திமலர், 9-30 வயலின், 10-00 பாட்டு.

திருச்சி - 1

காலை 6-30 வந்தேமாதரம், 6-40 ஆங்கிலத்தில் செய்தி, 6-45 நிகழ்ச்சிக் குறிப்பு, 6-50பக்திப்பாடல், 6-55 அறஉரை, 7-00 துதிப் பாடல்கள், 7-15 தமிழில் செய்தி, 7-30 வயலின், 8-00 ஆங்கிலத்தில்செய்தி, 8-15 பாபநாசம் — சிவன் பாடல்கள், 11-55 பிராந்தியச் செய்திகள்.

பகல் 12-00தொழிலாளர்களுக்கு, 12 30 கல்வி ஒலிபரப்பு, 1-00 பெண்ணுலகம், 1-30 ஆங்கிலத்தில் செய்தி, 1-50 இசைமஞ்சரி 2-00 தமிழில்செய்தி.

மாலை 5-00 பாட்டு, 5-30 திரைப்பட இசை.

இரவு 6-05 பிராந்தியச் செய்திகள், 6-15திரைப்பட இசை, 6-30 ஊர்ச்சாவடி 6-35 நாட்டுப்பாடல்கள், 6-45 இசைப்பயிற்சி, 7-00 பொதுமேடை, 7-15தமிழில் செய்தி, 7-30 விவசாயிகளுக்கான நிகழ்ச்சி, 8-00 சிற்பியின்பரிசு, 8-15 வயலின், 9-00 ஆங்கிலத்தில் செய்தி, 9-15 பலகணி 9-30 டெல்லி அஞ்சல், 9-45 வீணை — சிட்டிபாபு, 10-30 ஆங்கிலத்தில் செய்தி.

காரியாதிகாரியும் களை பிடுங்கினர்

தாளையடி செல்வாய்

சென்ற ஞாயிற்றுக்கிழமை பளை காரியாதிகாரி தலைமையில் பளை மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த 70 மாணவர்களும், ஆசிரியர் நால்வரும் மருதங்கேணிப் பகுதி வயல்களில் இறங்கி களை பிடுங்கினர். அப்போது காரியாதிகாரியும் வயலில் இறங்கி களை பிடுங்கினர். இவர்களுடன் செம்பியன் பற்று கிராமசபைத் தலைவர், மருதங்கேணி கிராம சேவையாளர், பளை பொலிஸ் பகுதியினர், விவசாயாட்டுப்பகுதிப் பாடசாலை ஆசிரியர், கமக்குழுவினர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

பீடைகள், களைகளிடமிருந்து உங்கள் நெற்பயிரைக் காப்பாற்றுங்கள்.

ஷெல் பீ. எச். சி. 10% தூள் — நெல் ஈயினது தாக்குதலின் ஆரம்ப அறிகுறி தென்பட்டதுமே நெற்கதிர்களை மூடி மறைக்கத் தக்கதாக ஷெல் பீ. எச். சி. 10% தூள் தூவிப் பயிரைக் காப்பாற்றுங்கள்

'என்றெக்ஸ்' 20 — சந்துக் குத்தி, அறக் கொடியான் மற்றும் ஏனைய கிருமிப் பீடைகளின் தாக்குதலற்ற பயிரையும் அமோகமான விளைச்சலையும் பெறுதற்கு மாதந்தோறும் கிரமமாக என்றெக்ஸ் 20 தெளித்து வரவும்.

ஷெல் களைப்புற்கொல்லிகள்

'எம் — 50' மற்றும் 'டி' — சிறுகோரை, சந்தனக் கோரை, மும்மூட்டுக் கோரை, கிடப்சி ஆகிய அகன்ற இலைக் களைகளையும் முற்கோரைப் புற்களையும் வன்மையாகக் கட்டுப்படுத்துதற்கு, நெற் பயிர் 3 - 6 வாரப் பருவமுள்ளதாய் இருக்கும் கட்டத்தில் 'எம் - 50' அல்லது 'டி' தெளிக்கவும்.

ஷெல் களைப்புற்கொல்லி 'ஆர்'

(3, 4 டி. பி. ஏ. சேர்க்கப்பட்டது) — களைப்புற் கொல்லி 'எம் - 50', 'டி' ஆகியவற்றால் கட்டுப் படுத்தும் சகல களைகளையும் நெற்சப்பி, கடுக்கன் புல், குதிரைவாற் புல், பன் முதலிய புற்களையும் பூண்டோடு ஒழிப்பதற்கு ஷெல் களைப்புற்கொல்லி 'ஆர்' தெளிக்கவும். தெளிப்பு வேலை, களைகள் இரண்டு இலை தள்ளியிருக்கும் பருவத்தில், அதாவது நெற்பயிர் 7 - 18 நாள் வளர்ச்சியடைந்திருக்கும் கட்டத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

ஷெல் இரசாயனப் பொருட்கள் SHELL

GRANT 2025

எப்பயிர்க்கும் உய்வுண்டாம் உய்விலை
அப்பயிர்க்கு 'ஷெல்' பூச்சி நாசினி பயன் பாவிக்காரெனில்.

AGENTS

ரேயல் டிஸ்பென்ஸறி

PHONE 397 JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுமைதானம் எங்கே அமைப்பது?

ஏகோபித்த முடிவுகண்டால் மூன்றுமாதத்தில் கிடைத்துவிடும்

உடுப்பிட்டி எம். பி. தகவல்

உடுப்பிட்டி, செவ்வாய் ''வடபகுதியிலுள்ள பல பாடசாலைகளுக்கு நிரந்தரமான விளையாட்டுமைதானம் இல்லாதது ஒருபெரும் குறையாகும். இதனால் விளையாட்டுத்துறையில் ஆர்வம் உள்ள பிள்ளைகள் ஏமாற்றம் அடைவதோடு, திறமை குன்றிப்போகிறார்கள். இக்குறைபாட்டைப் போக்க பாராளுமன்றத்தில் என்னாலியன்ற சேவை செய்வேன். வடமராட்சியில் பதிய விளையாட்டுமைதானம் ஒன்று நிறுவித்தர தேசியமயசேவைகள், விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. வீ. ஏ. சுகததாசா இசைந்துள்ளார். இவ்விளையாட்டு மைதானத்தைக் கரவெட்டியிலா, பருத்தித்துறையிலா நிறுவுவது என்ற பிரச்சினை ஏற்பட்டுள்ளமையால் விளையாட்டுமைதானம் அமைப்பது தாமதித்துள்ளது. வடமராட்சியிலுள்ள விளையாட்டுக் கழகங்களும், மதியஸ்தர்களும், வீரர்களும் விளையாட்டுமைதானம் எங்கே இடம் பெறவேண்டுமென்று ஏகோபித்த முடிவு செய்தால் இன்னும் மூன்றுமாதகாலத்திற்குள் நவீன விளையாட்டுமைதானமொன்று எமக்குக் கிடைத்துவிடும்.''

இவ்வாறு உடுப்பிட்டி எம் பி. திரு. மு. சிவசிதம்பரம் வடமராட்சி 'ஆசிரியர் சங்க உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இருவருடச்சாம்பியனுகத் தெரிவு செய்யப்பட்ட வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரிக்கு வடமராட்சி ஆசிரியர்சங்கம் அளித்த பாராட்டுவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் கூறினார்.

மேற்படி சங்கத்தலைவரும், வதிரி திரு. இருதயக்கல்லூரி அதிபருமான திரு. வீ. நடராசா தலைமையில் இக்கூட்டம் வதிரிபொமேர்ஸ் விளையாட்டுமைதானத்தில்நடைபெற்றது.

தலைவர் ''சாம்பியன்கப்'' பை தேவரையாளி இந்துக் கல்லூரி கப்டனிடம் பரிசளித்துப்பேசுகையில், ''வடமராட்சியில் உதைபந்தாட்டப் போட்டியின்தரம் உயர்ந்த நிலையை அடைந்துள்ளதென்றும் இதற்குக்காரணம் பாடசாலை விளையாட்டுப் பயிற்சியாளர்களின் ஆர்வமும்ஊக்கமுமேயாகுமென்று கூறினர். தேவரையாளி இந்துக்கல்லூரிஅதிபர் திரு.எம். எஸ். சினித்தம்பியும் பேசினர்.

செயலாளர் திரு. டபிள்யூ ஆர். அருளையா நன்றி கூறினர்

உதைபந்தாட்டம்

தீவுப்பகுதி சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், செவ் தீவுப்பகுதி உதைபந்தாட்டச் சங்கத்தின ஆதரவில் தீவுப்பகுதி விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி மேற்படி சங்க மைதானத்தில் திரு. எஸ். விநாயகலிங்கம் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

'லீடன்' வெற்றிக் கேடயத்துக்கான முதலாவது போட்டி கடற்படை விளையாட்டுக்கழகத்துக்கும் காரைநகர்ஜக்கியவிளையாட்டுக்கழகத்துக்குமிடையே மிகவும் விறுவிறுப்பாகநடைபெற்றது.இப்போட்டி ஆரம்பத்தில் இருந்து முடிவுவரையும் அருமையாகக் காணப்பட்டது. இரு கோஷ்டியினரும் ஒருவரையொருவர் விட்டுக்கொடுக்காமல் போட்டியிட்டமையால் இப்போட்டி முடிவில் ஒருவரும் கோலடிக்காதவகையில் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. [வி. நி.

தேவரையாளி இம்முறையும் வடமராட்சி சாம்பியனானது

உடுப்பிட்டி, செவ்வாய் வடமராட்சிப் பாடசாலை கட்கிடையே வடமராட்சி ஆசிரியர் சங்கம் நடாத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரிநான்காவது தவையாக மீண்டும் இவ்வருடச் சாம்பியனுகியுள்ளது. தேவரையாளி இந்துக்கல்லூரிக் கோஷ்டியின் காப்டனான செல்வன கே. மகேந்திரராசாவிடம் சாம்பியன் சின்னத்தை ஆசிரியர் சங்கத்தலைவர் திரு. வி. நடராசா பரிசளித்தார். போட்டி விபரங்கள் சிலவருமாறு:-

வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரிக்கும், நெல்லியடி மகாவித்தியாலயத்திற்குமிடையே ஏற்பட்ட உதைபந்தாட்ட மோதலில் தேவரையாளி கோஷ்டியினர் 3-0 கோல்களால் வெற்றியீட்டினர். இப்போட்டிக்குத் திரு. நித்தியானந்தன் மத்தியஸ்தம் வகித்தார்.

கரவெட்டி விக்னேஸ்வராகல்லூரிக்கும் வதிரிதேவரையாளி இந்துக்கல்லூரிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் இரு கல்லூரி கோஷ்டியினரும் தலா 2 கோல்கள் போட்டதால் போட்டி வெறறிதோல்வியின்றிமுடிந்தது.

வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரிக் கோஷ்டியின

காவலாளி தாக்கப்பட்டாராம்

யாழ்ப்பாணம், புதன் வேலம்பிராயைச் சேர்ந்த ஒரு தென்னந்தோட்டத்தில் சில இளநீர் கள்வர்களின் இரவு நேரத்தில் சென்று திருட்டுத்தனமாக இளநீர் பறித்ததுமல்லாமல் அத்தோட்டக் காவலாளியையும் தாக்கி விட்டுச் சென்றதாக சாவகச்சேரிப் பொலிசில் புகார் செய்யப் பட்டுள்ளது.

இப்பகுதித் தோட்டங்களில் இளநீர், தேங்காய் போன்றவைகளின் திருட்டு அதிகரித்து வருவதாகத் தெரியவருகிறது. [வி. நி.]

(8-ம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பு ஆணைப்பந்தி

பிள்ளையார் கோவில்

பிரம்ம ஸ்ரீ வி. வரதராசக் குருக்கள்

எழுதுவது:

அன்புடையீர்,

நீங்கள் அனுப் பி வைக்கும் பச்சைச் சந்தனம் சுத்தமானதாகவும் நறுமணமுள்ளதாகவும், தூய்மையாகவும் இருக்கிறது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஆணைப்பந்தி பிள்ளையாருக்குச் சந்தனக்காப்புச் சாத்தி பணிந்து அருள் பெறுகிறார்கள் அடியார்கள். உங்கள் சேவை தொடர்ந்து நடந்துவர வேண்டுமென்று எல்லாம் வல்ல சித்தி விக்னேஸ்வரனை வேண்டுகிறேன்.

இப்படிக்கு

வி. வரதராசக் குருக்கள்

இறைவன் திருமேனியில்

சந்தனக் காப்பிட்டு

அலங்கரிக்க மிகவும் உகந்த

பச்சை சந்தனம்

உடனுக்குடன் அரைத்துக் கொடுக்கிறோம்.

என்றும் எங்களிடம் கிடைக்கும்

சுந்தரம் பிரதர்ஸ்

கோவில் அபிஷேகப் பொருட்கள்

மருந்துச்சரக்கு விற்பனையாளர்

73, மின்சாரநிலைய வீதி. யாழ்ப்பாணம்

கலையின் கருவூலம்

கற்பனையின் - சிந்தனையின் சிகரம்

லீலா சித்திரங்கள் பழம்பெரும் கதைகள் சொல்கின்றது.

லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர்

லீலா டயறி தினுசுகள்

'லீலா' தமிழ் கலண்டர், டயறிகள்

1	பஞ்சாங்க சித்திரக் கலண்டர் (400 சித்திரங்கள் பல வர்ணங்களில்)	2-25
2	பஞ்சாங்க சித்திரக் கலண்டர் ஸ்பெசல் ,,	2-75
3	பாரதி கலண்டர் (நிர். 2)	1-35
4	பொக்கற் டயறி (லெதரட் பயிண்டிங்)	1-65
5	பிளாஸ்டிக் பொக்கற் டயறி (பென்சிலுடன்)	2-25
6	பேர்ஸ் பொக்கற் டயறி (பென்சிலுடன்)	2-75
7	வலட் (Wallet) டயறி பென்சிலுடன்	3-75
8	பிளாஸ்டிக் பஞ்சாங்க டயறி ''A'' (420 பக்கங்கள்)	3-75
9	பிளாஸ்டிக் பஞ்சாங்க டயறி ''B'' ,, ,,	3-25

பாவனையிலிருக்கும் எந்த டயறிகளிலும் பார்க்க கூடிய விடயங்களும் வேலைத்திறனும் உள்ளது லீலா டயறித் தினுசுகள் எனவே டயறிகளில் முதல் இடம் பெற்றது.

'லீலா' ஆங்கில கலண்டர் டயறிகள்

10	ஒரு திகதி கலண்டர் (நிர். 3)	85
11	ஜூனியர் பிளாஸ்டிக் டயறி	1-65
12	பொக்கட் டயறி (லெதரட் பைண்டிங்)	1-65
13	பிளாஸ்டிக் பொக்கட் டயறி (பென்சிலுடன்)	2-25
14	பேர்ஸ் பொக்கட் டயறி (பென்சிலுடன்)	2-75
15	வலட் (Wallet) டயறி (பென்சிலுடன்)	3-75
16	காரியாலய டயறி நிர். 1 (பக்கம் 1 நாள்)	3-00
17	பிளாஸ்டிக் காரியாலய டயறி நிர். 1	4-25
18	,, ,, ,, (வலட் சகிதம்) With Wallet	5-50
19	காரியாலய டயறி நிர். 2 (பக்கம் 2 நாள்)	2-50
20	பிளாஸ்டிக் காரியாலய டயறி (நிர் 2)	3-75
21	,, ,, ,, (வலட் சகிதம்) With Wallet	5-00
22	டெஸ்க் டயறி Executive 8''x 5'' போயா (விபரங்களுடன்) பக்கம் 2 நாள்	2-75
23	பிளாஸ்டிக் டயறி Exceutive 8''x5'' (போயா விபரங்களுடன்) ,,	4-00
24	,, ,, ,, (வலட் சகிதம்) With Wallet	5-75
25	(Giant) போயா டெஸ்க் டயறி (பக்கம் 1 நாள்)	5-00
26	(Giant) போயா பிளாஸ்டிக் டெஸ்க் டயறி	6-25
27	,, ,, ,, (வலட் சகிதம்) With Wallet	8-00

இலங்கையில் சகல இடங்களிலும் கிடைக்கும்

கேளுங்கள், பாருங்கள்

யாழ்ப்பாணத்தில்

தொகையாகவும் சில்லறையாகவும்

செ. ஆ. செ. அன் கோ

ஆஸ்பத்திரி வீதி, பெரியகடை.

ஏகவிநியோகஸ்தர்கள்:

லீலா ஸ்டோர்ஸ்

கொழும்பு.—11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'விஞ்ஞான ஆசிரியர் இடமாற்றத்தை ரத்து செய்க'

கல்விமான்கள் மகாநாட்டில் வற்புறுத்தல்

யாழ்ப்பாணம், செவ். விஞ்ஞான ஆசிரியர்கள் பெருந்தொகையில் பாரபட்சமானமுறையில் யாழ்ப்பாணத்திலுள்ள பிரதான பாடசாலைகளிலிருந்து இடமாற்றம் செய்யப்படுவது குறித்து கவலை தெரிவிக்கும் தீர்மானமொன்று நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கல்விமான்கள் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

அத்தீர்மானத்தில்மேலும் கூறப்பட்டிருப்பதாவது: இப்படியான இடமாற்றங்கள் சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு ஆபத்து விளைவிக்கும்அதேநேரத்தில்பெற்றோர் ஆசிரியர் மத்தியில், அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது. ஆதலால்இந்த இடமாற்றங்கள் ரத்துச் செய்யப்படவேண்டும் அல்லது பாடசாலை அதிபர்களுடன்கலந்தாலோசித்து நியாயமான ஒரு நடைமுறை இடமாற்றத்திட்டம்உருவாக்கப்படும்வரைபின்போடப்படவேண்டுமென்று இம் மகாநாடு வேருகிறது.

தமிழ்ப்பேசும் பிள்ளைகளின்கல்வி நலனைப்பாதுகாப்பதற்காகாவும் யாழ்ப்பாண பாடசாலைகளிலிருந்து விஞ்ஞான ஆசிரியர்கள்இடமாற்றத்தையிட்டு நடவடிக்கை எடுக்கவும் 'கல்விமான்கள் சபை' ஒன்று இம் மகாநாட்டில் நிறுவப்பட்டது.

யாழ்ப்பாணம் கில்னர் கல்லூரி மண்டபத்தில் திரு. எஸ்.ஏச். பேரின்பநாயகம் தலைமையில் நடைபெற்ற மகாநாட்டில் இச்சபை நிறுவப்பட்டது.

இம்மகாநாட்டில், டாக்டர்கள், வழக்கறிஞர்கள், முன்னாள் வித்தியாதிபதிகள், முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பட்டினசபை தலைவர்கள் உட்பட பல அறிஞர்கள் கலந்துகொண்டனர்.

கல்விமான்கள் சபையின் விதிமுறைகளை உருவாக்க ஒரு தற்காலிக கமிட்டி நிறுவப்பட்டது. இக்கமிட்டிக்கு திருவாளர்கள்: எஸ். ஏச்,பேரின்பநாயகம், எம். வைரமுத்து. ஏ.ஈ. தம்பர், எஸ். யூ. சோமசேகரம், சி. சபாரத்தினம், ரி. முத்து சாமிப்பிள்ளை, டாக்டர் கே. கனகரத்தினம் ஆகியோர் சபையினால் தெரிவுசெய்யப்பட்டனர்.

கடலில் சென்ற 21 பேர் கைது

வல்வெட்டித்துறை, திங். இன்று பகல் வல்வெட்டித்துறை ஆதிகோவில் கடலில் வைத்து ஒரு வள்ளத்தையும் அதிலிருந்த 21 பேரையும் வல்வெடடித்துறை இராணுவத்தினர் கைது செய்தனர்.

வல்வெட்டித்துறை இராணுவத்தைச் சேர்ந்த மூவர் ரோந்துசுற்றிக்கொண்டிருக்கையில் கடல்மேல் சென்றுகொண்டிருந்த வள்ளம் ஒன்றில் சந்தேகம்கொண்டு, கரையிலிருந்த கட்டுமரம் ஒன்றை எடுத்துக்கொண்டு அவ்வள்ளத்தை துரத்திப்பிடித்து சோதனையிட்டபோது அதில் 21 பேரும் ஒரு மூடையும் ஒரு தேங்காய் எண்ணத் தகரமும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இவ்வள்ளத்தில் இருந்தவர்கள் கள்ளக்கடத்தல் காரர்களாகவோ அல்லது சட்டவிரோதக்குடியேற்றக் காரர்களாகவோ இருக்கலாமென இராணுவத்தினா கருதுகின்றனர்:

வள்ளமும் பொருட்களும், அதிலிருந்தவர்களும் சுங்க இலாகாவில் ஒப்படைக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

சம அந்தஸ்து, ஆனால் பெயரில் மாற்றமிலலை

கொழும்பு, திங். கொழும்புப் பல்கலைக் கழகத்துக்கும், பேராதனைப் பல்கலைக் கழகத்துக்குமிடையிலான அந்தஸ்து சமமாகவே இருக்கும். ஆனால் பெயர்களைப் பொறுத்தவரை கொழும்பிலுள்ள இலங்கைப் பல்கலைக் கழகம் கொழும்பு என்றும் பேராதனையிலுள்ளது, இலங்கைப் பல்கலைக்கழகம் பேராதனை என்றுமே அழைக்கப்படும். இப்பெயர்களில் மாற்றம் செய்வதற்கில்லை.

இவ்வாறு பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயகா இன்று பிரதிநிதிகள் சபையில் நடைபெற்ற விவாதம் ஒன்றுக்கு பதிலளிக்கையில் கூறினார்.

எம்பிக்கள்பெற்ற காணிகள்

கொழும்பு, திங்கள் எம். பிகளுக்குப், அரசாங்க அதிகாரிகளுக்கும் விசேஷ காணி குத்தகை சபையால் காணிகள் கொடுக்கப்பட்டது குறித்து மந்திரி சபை ஆலோசித்து சில முடிவுகள் செய்திருக்கின்றது.

இம்மாதிரி நபர்களுக்கு இனிமேல் இவ்வாறு காணிகள் வழங்கப்படமாட்டாது. ஏற்கனவே காணி வாங்கி முதலீடு செய்யப்படாத காணிகள் ரத்து செய்யப்படும். முதலீடு செய்யப்பட்ட காணிகள் சிறிது காலத்துக்கு குத்தகைக்கு விடப்படும்,

காணி குத்தகை சபை 22 எம். பிகள் அல்லது அவர்களின் உறவினர்களுக்கும் 29 அதிகாரிகளுக்கும் காணிகள் வாங்கியுள்ளன.

கொழும்புத் திட்ட ஆலோசனைக் கூட்டம்

கொழும்பு, திங். கொழும்புத் திட்டத்தின் 18-வது ஆலோசனைக் கூட்டம் நாளை ரங்கூனில் ஆரம்பமாகிறது. இதன் நினைவாக நினைவுமலர் ஒன்றும் கொழும்பில் வெளியிடப்பட்டுள்ளது. இம் மலருக்கு இலங்கைப் பிரதமர் டட்லி சேனநாயகா அளித்துள்ள வாழ்த்துச் செய்தியில் "கொழும்புத் திட்டத்தில் யங்கு பற்றும் நாடுகளின் கூட்டுறவு, நட்பு இவைகளை தாம் கனடா, யப்பான் ஆகிய நாடுகளுக்கு சென்றிருந்த போது அறியக் கூடியதாக இருந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

இம் மகாநாட்டில் கலந்துகொள்வதற்காகஇலங்கைத் தூது கோஷ்டிக்கு தலைமை தாங்கி, பர்மாவில் இலங்கை தூதுவராக இருக்கும் என். டி. விஜயசேகரா செல்கிறார்.

விபத்துக்களுக்கு காரணம்முனி?

உடுப்பிட்டி, திங்கள் அண்மையில் நடைபெற்றபஸ்—கார்கோர விபத்தில் மூன்று உயிர்பளைப் பலிகொண்ட உடுப்பிட்டி - வல்வை நாற்சந்தியில் வைரவக் கடவுள் சிலை வைக்கப்பட்டுள்ளது. இந்நாற்சந்தியில் அடிக்கடிவிபத்துக்கள் ஏற்பட்டு வருவதனால்இச் சந்தியில்முனி நடமாடுவதாகப் பீதி ஏற்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து பேய்களை விரட்டும் நோக்கமாக பக்தர்கள் சிலர் சந்தியில் வைரவர் சிலை நிறுவிப் பூஜை செய்து வருகின்றனர். இதனால் வாகனங்கள் சந்தியில் நின்று சுவாமியை வழிபட்ட பின்னரேசெல்கின்றனவாம்

தேவரையா...

(7-ம் பக்கத் தொடச்ச்சி)

பெற்ற உதைபந்தாட்ட மோதலில்ஹாட்லி கோஷ்டி 2-0 கோல்களால் தேவரையாளியிடம் தோற்றது.

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரிக்கும், தேவரையாளி கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் தேவரையாளி 2-0 கோல்களால் வெற்றிபெற்றது. இப்போட்டிக்கு திரு. எம். எஸ். கமலநாதன் மத்தியஸ்தம் வகித்தார்.

வடமராட்சி தெரிவுக் கோஷ்டிக்கும் தேவரையாளி வீரர்களுக்குமிடையே ஏற்பட்ட உதைபந்தாட்ட மோதலில் இருதரப்பினரும் ஒரு கோல்வீதம் போட்டதால் ஆட்டம் சரிசமனாக முடிவுற்றது. திரு. ஏ. கிறிஸ்தோபர் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

சீனாவின் ஜனத்தொகை

நியூயோர்க், நவ. 20

தற்போது 71 கோடியாய் இருக்கும் சீனாவின் ஜனத்தொகை 2012-ம் ஆண்டில் 142 கோடியாகுமென உலக நாடுகள் பற்றி கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

தடையை நீக்க கோரிக்கை

திருக்கோணமலை, செவ். திருக்கோணமலைத்துறை முகம் தேசியமயமாக்கப்பட்டதன்பின் திருக்கோணமலை தேயிலை நிர்வாகஸ் தாபனத்தார் சீனாக்குடா துறையிலிருந்து கடலில்போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் இலங்கை கடற்படையினரால் தடைவிதிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் தாம் மிகவும் சங்கடநிலையிலிருப்பதாகவும் தாம் துறைமுகம் தேசிய மயமாக்கப்படுவதற்குமுன் இருந்ததுபோல் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படவேண்டுமெனவும்மேற்படி ஸ்தாபனத்தின் தலைமைக் காரியாலய பிரதம டைரக்டர் திரு. பி. எச். பொட்மோர் சுங்க இலாகா தலைமை உத்தியோகஸ்தருக்கு அனுப்பிவைத்துள்ளகடிதமொன்றில் கேட்டுள்ளார்.

நாட்டின்.....

[5ம் பக்கத்தொடர்ச்சி]

த்ததும் தபால்பெட்டி விரைவில் நிறுவப்படும்.

சமுகஸ்தாபனம் 24-4-67-ல் தபால்பெட்டி விஷயத்தை துரிதப்படுத்தும்படி மீண்டும் தந்தியொன்றை அனுப்பியது. இவ்வளவு கடிதத் தொடர்புகளுக்கும் பின்னர் நடவடிக்கையில் உருப்படியாக ஒன்றும் நடைபெறவில்லை யென்பதைத் தெரிந்துகொண்ட சமூக நிறுவனம் ஒரு புதிய யுக்தியை தபால் இலாகாவிற்குத் தெரிவிக்க முனைந்து 11-7-67-ல் பின்வரும் கடிதத்தைஅனுப்பியது. தபால் பெட்டியை விரைவில்நிறுவ நடவடிக்கை எடுக்க இரும்புச்சட்டங்கள் இல்லாததுதான் உங்கள்காரணமாயிருந்தால் [இடத்தைக்குறிப்பிட்டு] குறிக்கப்பட்டஇடத்தில் தேடுவாரற்றுக் கிடக்கும் இரும்புச்சட்டத்தை எடுத்து அதனை எங்களுக்கு உதவவும்.

இதற்கு 13-7-67-ல் பின்வரும் பதில் அனுப்பப்பட்டது. தாங்கள் குறிப்பிட்ட இடத்திலிருந்த தபால் பெட்டி அகற்றப்பட்டு திருத்துவதற்காககொழும்பிற்கு அனுப்பப்பட்டுள்ளது. அதனைத் திருத்திய பின்னர் அங்கே நிறுவவேண்டியிருப்பதால்,இரும்புச்சட்டத்தை உபயோகிக்கமுடியாது.

பின்னர் 4-9-67, 22-9-67 ஆகிய தினங்களில் கடிதமும் தந்தியும் அனுப்பப்பட்டன. 22-9-67-ல் அனுப்பிய கடிதத்தில் யாழ். தபால் அதிபர் பின்வரும் பதிலைத் தெரிவித்திருந்தார். தந்திகிடைத்தது. தபால் பெட்டியில் இரும்புச்சட்டங்களும் ஆணிகளும் பொருத்துவதற்காக அரசாங்க தொழிற்சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளன. இவ்வேலை முடிந்ததும் தபால் பெட்டி நிறுவப்படும். இது சம்பந்தமாக ஏற்பட்டகால தாமதத்திற்கும் வசதியீனத்திற்கும் வருந்துகின்றேன் இதன்பின்னர் சமூகஸ்தாபனம் இரண்டு மாதங்கள் கடிதங்கள் எழுதவில்லை. தபால்பெட்டியும் இன்னமும் வந்துசேரவில்லை.

இரண்டு வருடங்கள் முடிவடைந்தாலும் இத்தபால் பெட்டி வந்துசேருவதற்கான அறிகுறிகள் தென்படவில்லை. தபால்பெட்டிதான் கிடைத்துவிட்டாலும். அதனை உரிய இடத்தில் நிறுத்துவதற்கு எத்தனை மாதங்கள் செல்லுமோ? சமூகஸ்தாபனத்திற்கு இந்தக்கதியானால் சாதாரண பொதுமக்களின் நிலைமை என்ன ஆகும் என்பதைநாம் கூறவேண்டியதில்லை.

மலேரியா தடுப்புக்கு ரூ. 40 லட்சம் ஒதுக்கீடு

கொம்பனித்தெரு, செவ். இலங்கையில் மலேரியா பரவுவதை முற்றாகத் தடுப்பதற்காக அரசாங்கம் 40 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக்குமேல் செலவிடவிருக்கின்றது.

மலேரியா தடுப்புக்குஇந்த வருடத்தைவிட அடுத்த வருடத்தில் பத்துலட்சம் ரூபாமேலதிகமாகச் செலவிடவிருப்பதாகவும் அறியப்படுகிறது.

மலேரியாவிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக 27 பால்கட்டும் நிலையங்கள் இலங்கையின் பல பகுதிகளிலும் நிறுவப்பட விருக்கின்றன. இந்த நிலையங்கள் அடுத்தவருடத்திலிருந்துசெயல்படவிருக்கின்றன.

போதனா.....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கின்றனர்.

சிங்களப்பிள்ளைகள் தமிழ் மொழியையும் தமிழ்ப்பிள்கள் சிங்களத்தையும் மூன்றாவது இஷ்டபாடமாகப் படிப்பதற்கு புதிய கல்வி மசோதாவகை செய்வதைப் பொதுவாகப் பலரும் வரவேற்றபோதிலும் சிங்களமும் தமிழும் சகலருக்கும் கட்டாயபாடமாக்க மசோதா வகைசெய்தால் மொழிப்பிரச்னைகளே முடிவு கட்டி நாட்டிற்கே பெரு நன்மைகிடைக்க வழிகாட்டியிருக்கும் என்றுகருத்து வெளியிடுகின்றனர்.

ஐயரைத் தாக்கியவருக்கு ரூபா 100 அபராதம்

திருக்கோணமலை, செவ்வாய் கோயில் ஐயர் ஒருவரைத் தாக்கிய குற்றத்திற்காக திருகோணமலையைச் சேர்ந்த பொன்னையா வீரசிங்கம் என்பவருக்குத் திருக்கோணமலை மாஜிஸ்திரேட் திரு. சி. பி. குணவர்த்தனா 100 ரூபா அபராதம் விதித்தும் அவ்விதம் அபராதம் செலுத்தப்படாத பட்சத்தில் 6வார கடூழியச்சிறைத் தண்டனை விதித்தும் தீர்ப்பளித்தார்.

சமயகுரு ஒருவரைத் தாக்கியதால் குற்றம் அதிகரிக்கப்பட்டுள்ளது என மாஜிஸ்திரேட் தமது தீர்ப்பின் போது தெரிவித்தார்.

வயல்களில் மாணவர்

அச்சுவேலி, செவ்வாய் அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலைமாணவர்கள்பாடசாலைக்குச் சிறிது தூரத்து வயல்களில் களை பிடுங்கினர். இதில் மேற்படி பாடசாலை ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு நவம்பர் மாதம் 22-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org